# உயர்கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள்

பேராசிரியர். சு. வித்தியானந்தன்
நினைவுப் பேருரை.
11.10.1999.

பேராசிரியர். சோ. சந்திரசேகரம்,
கல்வியியற்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

வெளியீடு:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# உயர்கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள்

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
நினைவுப் பேருரை.
11.10.1999.

பேராசிரியர். சோ. சந்திரசேகரம்,
கல்வியியற் பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

வெளியீடு:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

📖 முதற்பதிப்பு: டிசம்பர்- 1999.
📖 அச்சிடல்: பதிவாளர் பணிமனை,
யாழ். பல்கலைக்கழகம்,

📖 ©: ஆசிரியருக்கு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு

TYPE SET: R.RAMESH
PRINTED & PUBLISHED BY: DR. K.KUNARASA,
ON BEHALF OF THE UNIVERSITY OF JAFFNA
AT REGISTRAR'S OFFICE, UNIVERSITY OF JAFFNA.

# முன்னுரை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டாகிய 1999இல் நடைபெற்ற இதன் வருடாந்த பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை 11.10.1999 இல் இடம்பெற்றது. இப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும், ஈழத்தின் முதுபெரும் தமிழறிஞர்களில் ஒருவருமான வித்தியானந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக இடம் பெற்ற இவ் விழாவில் *"உயர் கல்விச் சிந்தனையில் புதிய செல்நெறிகள்"* என்ற தலைப்பிலான விரிவுரை இடம்பெற்றது. ஈழத்தின் பாரம்பரிய பிரதேசத்தில் நிறுவப்பட்ட முதலாவது அதி உயர் அறிவுப் பீடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன் கால் நூற்றாண்டு கால பணியை நிறைவு செய்து நிமிர்ந்துள்ள இவ்வாண்டில் இத்தலைப்பில் விரிவுரை ஆற்றப்படுவது பொருத்தமானது. மேலும், அண்மைக் காலத்தில் இப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி தொடர்பான பல புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டும், மேலும் பல புதிய துறைகள் தொடர்பான நெறிகள் தொடங்கப்படுவதற்கான முன் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்ற இந்த சூழ்நிலையில் இத் தலைப்பில் சிறப்புரை இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பேருரை வழங்கிய பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சமூகவிஞ்ஞானக் கல்வித்துறையில் கால்நூற்றாண்டுக்கு மேலாக பல்கலைக்கழக ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். பேராசிரியர். சு. வித்தியானந்தனின் மாணவரும் அவர் மீது நிறைந்த அபிமானமும் கொண்ட பேராசிரியர் சந்திரசேகரம் இப் பேருரையை ஆற்றுவது மிகவும் பொருத்தமானது.

இந்த ஞாபகார்த்தப் பேருரையில் உயர் கல்வி தொடர்பாக அண்மைக் காலத்தில் வெளிக்கிளம்பியுள்ள புதிய சிந்தனைகள் அவற்றின் நவீன போக்குகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது. உலக மயமாதல், கல்வியைத் தனியார் மயப்படுத்தல், தகவல் தொழிநுட்பத்தில் அதி வேக தாக்கம், உயர் கல்வியை ஜனநாயகப்படுத்தல் போன்ற பல்வேறு சமகால முன்னேற்றங்கள் மற்றும் வளர்ச்சிகள் என்பவற்றால் உயர் கல்வி எவ்வாறு விசையுடன் செல்கின்றதென இப்பேருரை விளக்குகிறது.

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை.
துணைவேந்தர்.
யாழ். பல்கலைக்கழகம்.

## பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுச் சொற்பொழிவு.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களே! பட்டமேற்படிப்புப் பீடத்தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியப் பெருந்தகைகளே! விரிவுரையாளர்களே! மற்றும் அன்பர்களே, நண்பர்களே!

இந் நாள் வாழ்நாளின் ஒரு நன்னாள்; கிடைத்தற்கரிய ஒரு பொன்னாள். பேரறிஞரும், பெருந்தகையாளரும், பெருங்குணம்படைத்த பேராசிரியர். சு.வித்தியானந்தன் அவர்களின் நினைவுச் சொற்பொழிவை, தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் செழுங்கலை நியமமாகவும் அதி உன்னத உயர்கல்வி நிலையமாகவும் விளங்குகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றக்கிடைத்த இவ்வாய்ப்பினையிட்டு பெருமையும், பெருமகிழ்வும் அடைகின்றேன். இங்கு கற்பிக்கும் பல மூத்த போராசிரியர்களிடம் (பேராசிரியர் சண்முகதாஸ்) பாடம் கேட்கும் பாக்கியம் பெற்றவன் நான். இங்கு கற்பிக்கும் பல பேராசிரியர்கள் - குறிப்பாக பேராசிரியர் பாலச்சந்திரன், கலாநிதி சபா ஜெயராஜா என்னுடன் மாணாக்கர்களாகப் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள்; ஒரு சிலர், போரசிரியர் சின்னத்தம்பி என்னுடன் விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றவர்கள். இன்றளவும் நண்பர்களாகவும் விளங்குகின்றவர்கள்; புலமைசார் பணிகளில் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் பாக்கியமும் எனக்குண்டு. அவர்கள் மத்தியில் உரையாற்றும் வாய்ப்பு பெருமகிழ்வைத் தருகின்றது.

இன்று தமிழ் கூறும் நல்லுலகம் மட்டுமன்றி உலகளாவிய சகல நாட்டினரின் உன்னிப்பான கவனத்திற்கு உள்ளாகிய யாழ்ப்பாணத்து மண்ணில், உலகில் வேறு எந்த உயர்கல்வி நிலையமும் எதிர் நோக்காத இன்னல்கள், இடர்ப்பாடுகளுக்கிடையே தமிழ் இளைஞர்களுக்கு உயர்கல்வி புகட்டி வரும் யாழ் பல்கலைக்கழகத்தில் உரையாற்றக் கிடைத்த இவ்வரும்பெரும் வாய்ப்பும் எனக்கு பெருமையைத் தருகின்றது. எனது வாழ்நாளில் இதற்கு ஈடான மற்றொரு உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டாது என்பது கண்கூடு. இன்னொரு விடயம்; இன்று வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் நான் 1974 இல் நடந்த தொடக்க விழாவிலும் கலந்து கொண்ட பெருமை எனக்குண்டு.

அது மட்டுமன்று; யாழ் மண்ணுக்கு நான் புதியவனுமல்லன்; அந்நியனுமல்லன்; தமிழன் இலங்கையின் எப்பாகத்தில் பிறந்திருந்தாலும் உலகின் எந் நாட்டில் உதித்திருந்தாலும், யாழ் மண் பற்றிய பெருமை எப்போதும் அவனுக்குண்டு. ஆயினும் எனக்கொரு விசேட காரணமுண்டு. சிறுவயதில் முந்நூறு மைல் கடந்து தன்னந்தனியே தெல்லிப்பளை வந்து மகாஜனக் கல்லூரியில் கல்விக்காக அடைக்கலம் புகுந்தவன் நான். பாவலர் துரையப்பாவை ஸ்தாபகராகக் கொண்ட அக்கல்லூரியில் திருவாளர்கள் ஜெயரத்தினம், மகாதேவா, கார்த்திகேயன், சண்முகசுந்தரம், சிவபாதசுந்தரனார், போன்ற கல்விச் சிறப்புமிக்க பெரியார்களின் திருவடிகளில் கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றேன். எங்கிருந்தோ வந்தாலும் மகாஜனாக் கல்லூரியும், அக் கல்லூரி வளர்த்திட்ட கல்விமரபும் தமிழ்ப் பாரம்பரியமும் என்னைத் தங்களுள் ஒருவனாக அரைவணைத்துக் கொண்டன. என்னைப் போன்ற பல நூற்றுக்கணக்கானவர்களை அக்கால யாழ் மாவட்டப் பாடசாலைகள் ஏற்று கல்வி வழிகாட்டின. இன்று உங்கள் முன் பெருமையுடன் பேராசிரியராக உரையாற்றுகின்றேனென்றால் அதற்கு மகாஜனாக் கல்லூரி எனக்கு வழங்கிய கல்வியும், அக் கல்லூரிப் பேராசான்கள் எனக்கு வழங்கிய ஆதரவும் ஆசீர்வாதமுமே காரணம் என்பதை உறுதியுடன் கூறுவதில் பெருமையும் புளகாங்கிதமுமடைகின்றேன்.

-யாழ் பல்கலைக்கழக மண்ணிலிருந்து உரையாற்றினாலும் யாழ் குடாநாட்டு மண்ணிலிருந்து, இலங்கையின் வடபுல மண்ணிலிருந்து இங்கு வாழும் பல இலட்சம் மக்களுடன் உரையாடுவதாக எண்ணுகின்றேன்.

-உலகளாவிய ரீதியில் 7 கோடி தமிழர்கள் வாழுகின்ற நிலையில், தமிழ், தமிழ்மொழியுரிமை, தமிழனின் தனித்துவ அடையாளம், பண்பாடு என்பவற்றுக்காகக் காலங்காலமாக உழைத்துப் போராடிவரும் மக்கள் மத்தியில், ஒரு போராட்டத்தளத்தில், களத்தில் நின்று உரையாற்றும் வாய்ப்பினை வழங்கிய துணைவேந்தர் அவர்களுக்கு எனது நன்றிகள்.

-மொழியுரிமை, குடியுரிமை, வாழ்வுரிமையற்று வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்களின் கல்விஉரிமைகளைப் பற்றி எடுத்துரைத்த சேர். பொன். அருணாசலம், அவர்கூறிய கல்விப் பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்தவர் ஞானமுத்து, நந்தி, பெனடிக்பாலன், முதலானோர் இப்பிரச்சினைகளை

முன்வைத்து நாவல் எழுதியவர்கள். அவர்களை நினைவு கூர விரும்புகின்றேன்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களிடமும் கல்வி பெறும் அரிய பாக்கியம் பெற்றவன் நான். அவருடைய பன்முக ஆளுமையையிட்டு அக் காலத்திலேயே அதிசயித்தவன் நான். ஐரோப்பிய துரை போன்று வகுப்புக்கு வந்தாலும் பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களின் உள்ளார்ந்த தருக்கங்களையும். நயங்களையும் பெருமைகளையும், இலகு தமிழில் உணர்த்தியவர் பேராசான்; விரிவுரையென்றாலே வேப்பங்காய் என நையாண்டி பேசும் மாணவரும் பேராசானின் விரிவுரையென்றால் உரிய காலத்துக்கு முன்னரே வந்து விடுவர். தமிழிலக்கிய அறிவிலும் ஆராய்ச்சியிலும், ஆங்கிலப் புலமையிலும் மட்டுமன்றி தமிழுணர்விலும் தமிழர் வரலாற்றுப் பெருமையிலும் தம்மை இறுக இணைத்துக் கொண்டவர் பேராசிரியரவர்கள். பேராசிரியரின் பன்மொழி அறிவும் பல்துறை அறிவும் அவரது தமிழியல் ஆராய்ச்சியைப் புதிய கோணங்களில் இட்டுச்சென்றதையும் தமிழ்மொழி வளர்ச்சியை அவர் பல பரிமாண நோக்குடன் பார்க்கச் செய்ததையும் மறுக்க முடியாது. தமிழறிஞராக மட்டுமன்றித் தமிழுணர்வுடனும் அவர் தமது பணிகளை ஆற்றினார். இப் பின்னைய உணர்வுகள் வழங்கிய உந்துசக்தியின் காரணமாகவே பல உயர் அதிகாரபீட எதிர்ப்புக்களுக்கும் பயமுறுத்தல்களுக்கிடையிலும், நண்பர்களின் ஆலோசனைகளை நிராகரித்தும் தமிழ்ப்பணியே வாழ்க்கைப்பணி எனும் நோக்கில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தி வைத்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய பெரும் பணியொன்றுண்டு. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் என்றாலே கீழ்மட்ட சமூகத்தின் தொடர்பின்றி அதனுடைய யதார்த்தநிலை பற்றிய உணர்வும் பிரக்ஞையுமின்றி அதனுடன் தொடர்பற்ற முறையில் உச்சாணிக் கொப்பில் வாழ்பவர்கள் என்ற பொதுவான முறைப்பாடொன்றுண்டு. கற்பித்தல் பணியிலும் ஆய்வுச் செயற்பாட்டிலும் ஈடுபடுபவர்கள். தமது தர்க்க முறையான பகுப்பாய்வினாலும், ஆழ்ந்த சிந்தனையாலும் உலகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு யதார்த்தங்களும் இயற்கை உலகம் பற்றிய உண்மைகளும் இவை தாம் என்பதை உணர்த்தும் ஆய்வுப் பணியைச் செய்பவர்கள் பேராசிரியர்கள்; பல்கலைக்கழகங்கள் ஏற்றுக்

கொண்டுள்ள மரபுவழிப் பணிகளும் தொழிற்பாடுகளும் இவை தாம்! மேலை நாட்டுப் பல்கலைக்கழகப் பாரம்பரியம் வகுத்து வரையறை செய்த நெறியே இது. ஆனால் பேராசிரியர் வித்தி அவர்கள் இவ்வரையறைக்குள் கட்டுப்பட்டுத் தமது பல்கலைக்கழக வாழ்க்கையை நடத்திச் செல்ல விரும்பவில்லை.

உயர்கல்வியை வழங்கும் பல்வேறு நிலையங்கள் காணப்பட்டாலும் அவற்றில் தனிச்சிறப்பான ஓர் அதியுன்னத நிலையைப் பெற்றிருந்தவை பல்கலைக்கழகங்கள். உயர்கல்வி வரலாற்றில் பல்கலைக் கழகங்கள் தவிர்ந்த ஏராளமான உயர்கல்வி நிலையங்களை இனங்காணமுடியும். அப்பிற உயர்கல்வி நிலையங்கள் பல்கலைக்கழகமல்லா உயர்கல்வி நிலையங்கள் என்றும் சுட்டப்பட்டன. அவ்வாறாயின் பல்கலைக் கழகங்களின் தனிச் சிறப்பு அல்லது அதனை வேறுபடுத்திக் காட்டும் விசேட அம்சம் தான் என்ன? என்ற வினா எழுகின்றது.

மரபுவழிப் பல்கலைக்கழகங்கள் எப்போதுமே உயர்மட்டச் சமூகக் குழுக்களிலிருந்து (elite social groups) மாணவர்களை அனுமதித்து வந்தன; பட்டம் பெற்றோர் உயர்தொழில்களில் அனுமதி பெற்று வந்தனர்; பிரயோக மற்றும் செயன்முறைப் பயிற்சிகளை விடுத்து புலமைசார் மற்றும் கோட்பாட்டு ரீதியான கல்வியில் அக்கறை செலுத்தி வந்தன. விஞ்ஞான ரீதியான அறிவை மேம்படுத்தல், ஆராய்ச்சிகளையும் உயர்படிப்புக்களையும் ஊக்குவித்தல், என்பன ஜெர்மானிய ஹம்போல்டியன் (Hamboldtian) பல்கலைக்கழகம் வகுத்த நெறி; போராசிரியர் புரியும் ஆராய்ச்சிகளே அவர் கற்பிக்கும் பாடத்திட்டம் என ஆராய்ச்சியையும் கற்பித்தலையும் இணைத்த ஒரு கல்வி நெறி ஜெர்மனிப் பல்கலைக் கழகத்தின் படைப்பேயாகும். இவ்வாறே உயர் தொழில் பாங்கினை (professional formation) வளர்த்தெடுப்பதில் பிரஞ்சுப் பல்கலைக்கழக மரபு (grandes ecoles) முன்னின்றது. மூன்றாவதாக இனங்காணக்கூடிய மற்றொரு கல்வி மரபு தாராண்மை வாத மற்றும் திறனாய்வுக் கல்வி (liberal and critical education ). பிரித்தானிய ஒக்ஸ்போட், கேம்பிறிஜ் பல்கலைக்கழகங்களும் நூற்கல்வி மரபைப் (Great Books' tradition) பெரிதும் போற்றிய அமெரிக்க சிக்காக்கோ பல்கலைக்கழகமும் அந்நாட்டின் ஏனைய உயர் குழாத்துப் பல்கலைக்

கழகங்களும் மேற்கூறிய தாராண்மைவாத, திறனாய்வுக் கல்வி மரபைப் பெரிதும் மதித்தன.

இப் பல்கலைக்கழக மரபுகளில் மக்கள் அம்சத்தையோ, சமூகபரிமாணங்களையோ சாதாரண மக்களின் வாழ்க்கைநிலை, கலை, இலக்கிய மேம்பாட்டுக்கான இலக்குகளையோ காணமுடியாதிருந்தது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்ட போது அவை சமூக, கலாசார விடுதலைக்கும் மறுமலர்ச்சிக்கும் பணியாற்றவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது உண்மையே! ஆனால், நடைமுறையில் அவை மேம்பாட்டுப்பணியில் சமூகத்திலிருந்து விடுபட்டமுறையில் மறுப்பதற்கில்லை. இக் காலகட்டத்தில்தான் பல்கலைக்கழகப் பணிகளும் தொழிற்பாடும் பற்றிய ஒரு புதிய சிந்தனையை பேராசிரியர் வித்தி அவர்கள் முன்வைக்க முற்பட்டார். கற்றறிந்த பேராசிரியர்கள் தம்மை உருவாக்கி உலகுக்களித்த சமூகம், அதில் வாழும் மக்கள், அவர்தம் கலை, இலக்கியப் பணபாட்டுத்தேவைகள் என்பவற்றுடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்; பெருவளர்ச்சி பெற்று வரும் நவீன வாழ்க்கை முறைகளின் தாக்கத்தால் மறைந்துவரும் மக்கள் கலைகளை அழியவிடாது அவற்றின் மறுமலர்ச்சிக்குத் தம்மை அர்ப்பணிக்கும் பணியில் ஈடுபட்டுப் பெருந்தொண்டாற்றியவர் பேராசிரியரவர்கள்.

கற்றறிந்த புலவர்களின் சொல்லலங்காரங்களையும், சொற்சிலம்பங்களையும், இலக்கண இலக்கியத் தேர்ச்சியையும் உள்ளடக்கமாகக் கொண்ட இலக்கியங்களும் கலைகளுமே பாராட்டுக்குரியவை; ஏனைய நாட்டார் கலைகளும், சாமானியர்களின் இலக்கியங்களும் கூத்துக்களும் நாட்டாரியலும் அந்தஸ்த்துக்குத் தகுதியற்ற இழிசனர் வழக்கு என்று கருதப்பட்ட ஒரு மரபும் எம்மிடையே உண்டு. ஆங்கில மொழிப் புலமையும், மேல்நாட்டு வாழ்க்கை முறைமையையும் உயர் கல்வி ஆராய்ச்சி அனுபவமும் கொண்ட பேராசிரியர் அவர்கள் இம்மரபின் கவர்ச்சியால் நிலை தடுமாறவில்லை. தமது மொழி, இலக்கியம், மக்கள் கலைவடிவம் தொடர்பாகத் தமக்கொரு மாபெரும் பணி காத்திருப்பதை அவர் உணர்ந்தார். இப் பணியிலிருந்து அவர் தப்பியோட முற்படவில்லை. இதற்கு மாறாகக் கிராமப்புறங்களில் கேட்பாரற்றுக் கிடந்த நாட்டுப்புற கலைவடிவங்களுக்குப் புத்துயிர் வழங்குவதைத் தமது உயர்கல்விசார் கடமைகளில்

ஒன்றாகக் கருதிக் கடமையாற்றினார். நாட்டுக்கூத்துக்களையும் புதுப்பித்து மெருகேற்றி காலச் சூழலுக்கேற்ப அவற்றை வடிவமைப்பதில் பல்கலைக் கழகத் தளத்தை அவர் நன்கு பயன்படுத்தினார். நாட்டார் கலைகளைப் பயிற்றிப் புதுப்பிக்கும் கலாசார மையங்களாகப் பல்கலைக்கழகம் செயற்பட அவர் வழிவகுத்தார். கற்றோர் குழாம் சாதாரணமாகக் கருதிக் கொள்ளவோ ஆய்வு செய்யவோ பின்னின்ற நாட்டார் கலைகளுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்த்துக் கிடைக்கச் செய்தவர் பேராசிரியரவர்களாவர்.

மேல்நாட்டு விஞ்ஞானக் கல்வி, சமூக அறிவியல் கல்வி, பல்கலைக்கழகக் கல்வித்தகுதிகள் வழங்கிய உயர் அந்தஸ்து, பட்டம், பதவி, என்பவற்றின் செல்வாக்கினால் தமது சொந்தப்பண்பாடு, கலைகள், சுதேசபாரம்பரியம், என்பன பற்றிய உணர்வின்றி இயங்கிவந்த பல்கலைக்கழக அமைப்பானது போரசிரியரின் சிந்தனையாலும் முயற்சியாலும் “உள்ளே நோக்கத்” (The University system became inward looking as a result of Prof . Viththi) தொடங்கியது. பல்கலைக்கழகக் கல்வியை “சுதேசமயமாக்கும்” செயற்பாடுகளில் (indigenization process) போரசிரியரின் பணி முக்கியமானது. இவ்வளர்முக நாடுகளின் பல்கலைக் கழகங்கள் தமது சமூக அடித்தளத்தை உணர்ந்து, சமூகத்துடன் இணைந்து சமூக, கலாசார மேம்பாடு என்ற முறையில் பல்கலைக்கழகக் கல்விக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கியவர் பேராசிரியரவர்கள்.

கலை, கலாசாரப் பணிகளைப் பல்கலைக்கழகங்களின் பணிகள், தொழிற்பாடு என்பவற்றுடன் இணைத்துச் சிந்தித்து உருவாக்கிய பேராசிரியரின் இக் கோட்பாடுத் தளத்தைச் சிறிது விளக்கினோம். இதிலிருந்து உயர்கல்விச் செயற்பாட்டிலும், குறிப்பாக நவீன பல்கலைக்கழகங்களின் செயற்பாட்டிலும், இனங்காணக்கூடிய சில முக்கிய செல்நெறிகளை இவ்வுரையில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானதாகும். அத்துடன் யாழ் பல்கலைக்கழகம் வெள்ளிவிழாக் கொண்டாடும் இவ்வேளையில் இவ்வுயர்கல்விச் செல்நெறிகள் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்வதில் கூடிய பொருத்தமும் உண்டு.

உலகளாவிய ரீதியில் உயர்கல்விச் செயற்பாடுகளில் தென்படும் பதிய செல்நெறிகளை ஆராயுமுன் எமது நாட்டின் அரை நூற்றாண்டுகால பல்கலைக்கழக வளர்ச்சியின்

செல்நெறிகள், அனுபவங்கள், படிப்பினைகள் பற்றி ஒரு சிறிது நோக்குவோம்.

இலங்கைப் பல்கலைக்கழகம் 1942 இலேயே முதன்முதலாக நிறுவப்பட்டாலும் அத்தகைய பல்கலைக்கழகமொன்றைக் கோரும் இலங்கைப் பல்கலைக்கழக சீர்திருத்தச் சங்கம் 1906ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டது. இக் கோரிக்கையை முன்வைத்து உழைத்தவர்களில் தமிழ் பெருந்தகைகளுக்கு மிக முக்கிய இடமுண்டு. இச் சங்கத்தை நிறுவியவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களாவர். ஏற்கனவே 1870 களில் ஆங்கிலப் பல்கலைக்கழகங்களுடன் இலங்கை உயர் கல்வியை இணைக்கும் கொள்கை உறுதி பெற அப்போதைய சட்டசபை உறுப்பினர் திரு. பி. குமாரசாமி ஒரு முக்கிய உந்து சக்தியாக விளங்கினார். சேர். பி.அருணாசலம் உட்பட ஏனைய தேசியவாதிகள் உள்ளூர்த் தேவைகளை நிறைவாக்கவல்ல ஒரு பல்கலைக்கழகம் தேவை; பல்கலைக்கழக நிறுவனம் தேசிய வாழ்வுக்கு இன்றியமையாததொன்று; தேசியப்பண்பாட்டின் அழிவினைத் தடுக்க இலங்கை மக்கள் விழித்தெழுந்து ஆவன செய்தல் வேண்டுமெனக் குரல் கொடுத்தனர். திரு. ஆனந்தக் குமாரசாமி அவர்கள் புதிய பல்கலைக்கழகம் மக்களை ஆங்கிலமயமாக்கும் ஒன்றாக அமையக்கூடாது என்றும் கீழைத்தேய மொழிகளை விருத்தி செய்யத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தினார். நவீன கல்வியையும் பாரம்பரிய கலாசாரத்தையும் கற்பிக்கும் நிலையமாகப் பல்கலைக்கழகம் விளங்க வேண்டும் என்பது அவர் கருத்து. நாட்டின் தொன்மைக் கலாசாரத்துக்குப் புத்துயிரளித்து அதனை விருத்தி செய்வதுடன் நவீன விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், வர்த்தகம் என்பனவற்றையும் கற்பிக்க வேண்டுமென்றார்.

## பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை மாற்றங்கள்.

பிற்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம் வளர்ச்சி பெறப் பல தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்களின் பணியும், பங்களிப்பும் முக்கியத்துவம் பெற்றன. 1942இல் அமைக்கப்பட்ட பல்கலைக்கழகமே ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாயிற்று. அக்காலத் தமிழ் அறிஞர்கள் தேசிய ரீதியாகவும், தேசிய அளவிலும் சகல இனத்தவரின் ஒருமுகப்பட்ட மேம்பாட்டை நோக்கிப் பல்கலைக் கழக அமைப்பைப் பற்றிச் சிந்தித்தார்கள்.

ஆயினும், பிற்கால பல்கலைக்கழக வரலாறு, தமிழ்இளைஞர்களின் உயர்கல்வி மேம்பாட்டில் அக்கறை செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. விஞ்ஞான மையப் போதனா பீடங்களில் (குறிப்பாக மருத்துவம், பொறியியல்) திறமைச் சித்தியின் அடிப்படையில் தமிழ் மாணவர்கள் அனுமதி பெறத்தடை செய்யும் வகையில் அறிமுகம் செய்யப்பட்டட மொழி வாரியான முறையில் புள்ளிகளைத் தரப்படுத்தல், பொதுவாக புள்ளிகளைத் தரப்படுத்தல், மாவட்ட அடிப்படையிலான அனுமதி முறை போன்ற திறமைச் சித்தி அனுமதி முறையை முறியடிக்கும் பல கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன. இக் கொள்கைகள் தமிழ் மாணவர்களின் அனுமதித் தொகையில் ஏற்படுத்திய மிகப் பாதகமான விளைவுகள் காரணமாக அனுமதிக் கொள்கை மாற்றங்கள் பாரபட்சமான நடவடிக்கைகள் எனப் பல சிங்கள ஆய்வாளர்களால் விபரிக்கப்பட்டன. 1970 களில் வடபுலத்தமிழர்கள் தமது வாழ்க்கை மேம்பாட்டுக்கு நம்பியிருந்த உயர்கல்வி வாய்ப்புக்கள் கண்ட வீழ்ச்சியும் அதனால் ஏற்பட்ட விரக்தியும், ஏமாற்றமும் சமகால, சமூக, அரசியல் அமைப்புகள் மீது முழுவதாக நம்பிக்கையிழக்கச் செய்தன. நாட்டில் இனப்பிரச்சினை தீவிரமடைவதற்கான முக்கியமான ஒரே காரணி (single major factor) மொழி வாரியான தரப்படுத்தலேயென்றும் இதனால் நாட்டில் இரத்த ஆறும், கண்ணீரும் பெருகி ஓட நேர்ந்தது என்றும் பொருளாதார வளர்ச்சியும் தேசிய அபிவிருத்தியும் சீர்குலைய நேரிட்டது என்றும் ஆய்வாளர்கள் குறித்துரைத்துள்ளனர். (Dr.K.D. அருட்பிரகாசம் -1977). 1970களிலும் 1980களிலும் நாட்டின் இன உறவுகள் திட்டவட்டமாகச் சீர்கேடடையவும் வடகிழக்குத் தமிழ் மாகாணங்களில் தீவிரவாத அரசியல் தோற்றமுறவும் வேறெதெனையும் விட பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையே காரணமாகவிருந்தது என்பது மற்றொரு ஆய்வாளர் கருத்து (K.M. de Silva –1995). 1965-1990 காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதி நடைமுறையிலும், கொள்கைகளிலும் பத்து முறை மாற்றங்கள் செய்யப்பட்டமை, தேசிய ரீதியாக இணக்காமான ஒரு கொள்கையினைத் தீர்மானிப்பதில் தடுமாற்ற நிலைமையிருந்தது என்பதைத் தெளிவாக்குகின்றது.

கடந்த ஆறு தசாப்த கால உயர்கல்வி வரலாற்றில், தமிழ் சிறுபான்மையினரையும் தேசிய வளர்ச்சியையும்

பொறுத்தவரையில் இத்தகைய அனுமதிக் கொள்கை மாற்றங்களை ஒரு கறைபடிந்த ஏடாகவே கொள்ளமுடியும். பிற நாடுகளில் கடந்த காலங்களில் கடைப்பிடிக்கப்பட்ட இது போன்ற கொள்கைகள் எப்போதுமே சிறுபான்மையினருக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் வகையிலேயே அமைந்தன. ஐக்கிய அமெரிக்காவில் சிறுபான்மை ஆபிரிக்க-அமெரிக்க இனத்தவருக்குச் சார்பான பல நடைமுறைகளும் (affirmative action) இந்தியாவில் பட்டியல் வகுப்பினருக்கு இடமளிக்கும் வகையில் இட ஒதுக்கீட்டுக் கொள்கைகளும் (positive discrimination) அறிமுகம் செய்யப்பட்டமை இவ்விடத்துக் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அனுமதிக் கொள்கைகள் மொத்தத்தில் தமிழ் மாணவர் அனுமதியைக் குறைத்தவிடத்து கடந்த பல தசாப்தங்களாக உயர்கல்வி வாய்ப்புகளின்றிப் பின் தங்கிய நிலையில் வாழும் பெருந்தோட்ட மாவட்டத் தமிழ்மாணவர்களுக்கு அவை உதவவுமில்லை.

**உயர் கல்வியில் தமிழ்வழிக்கல்வி.**

தமிழ் சிறுபான்மையினருடைய உயர்கல்வி வாய்ப்புகள் தொடர்பான மற்றொரு செல்நெறியினையும் இவ்விடத்துக் குறிப்பிட வேண்டும். இதுவும் கடந்த ஆறு தசாப்த கால பல்கலைக்கழக வரலாற்றுடன் தொடர்புடையது. 1942 ஆம் ஆண்டு தொடக்கம் வளர்ச்சி பெற்று வந்த தேசியப் பல்கலைக்கழக அமைப்பு சகல இனத்தவருக்கும் இடமளித்து வந்தது. ஆயினும் பல்வேறு பிராந்திய ரீதியான கோரிக்கைகள் காரணமாகவும் பல்கலைக்கழக மாணவர் தொகை அதிகரிப்பினாலும் மாகாணரீதியாகப் பல்கலைக்கழகங்கள் உருவாக வேண்டியதாயிற்று. இதன் பின்னர் நன்கு வளர்ச்சி பெற்று, நூலகங்கள், ஆய்வுகூடங்கள் போன்ற அடிப்படை வசதிகளையும் கல்விசார் விருத்தியையும் விரிவாகப் பெற்றிருந்த ஆரம்ப காலப் பல்கலைக்கழகங்களின் தேசியத்தன்மை குறையநேரிட்டது. இப்பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழி வழிப் பிரிவுகளும் தமிழ் மொழிமூல மாணவர் தொகையும் குறையத் தொடங்கின. நவீன துறைகளில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி நெறிகள் தமிழ் மொழியில் வழங்கப்படவில்லை. (உதாரணமாக: சமூக அபிவிருத்தி, ஆலோசனையியல், உளவியல், பரீட்சையியல் துறை சார்ந்த பட்ட மேற்படிப்பு திப்ளோமா.) தமிழ்பிரதேசங்களில் ஏற்பட்ட பல்கலைக்கழக வளர்ச்சி அவசியமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தவிடத்து தென் இலங்கைப் பல்கலைக்

கழகங்களில் தமிழ்வழிப் பயிற்சி நெறிகள் உரிய ஆதரவைப் பெறவில்லை. இலங்கையில் தமிழ்வழிப் பயிற்சி நெறிகளும் உயர்கல்வித்துறைகளில் தமிழ்வழிக் கல்வியின் வளர்ச்சியும் எதிர்காலத்தில் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்களையே நம்பியும் சார்ந்தும் இருத்தல் வேண்டும்; எதிர்காலத்தில் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களின் பல்துறைசார்ந்த உயர்கல்விக்கும் (உ-ம்: மருத்துவம், கலை, விஞ்ஞானம் போன்றன.) அவையே முதன்மை நிலையங்களாக விளங்கும் என்பதையும் அண்மைக் கால புள்ளி விபரங்கள் காட்டுகின்றன:

-முழுப் பல்கலைக்கழக அமைப்பிலும் தமிழ்மொழிவழியில் கல்வி பயிலும் மாணவர்கள் 3540 பேர். (ஆங்கில வழியில் 12711)

-.இம் 3540 தமிழ்வழி மாணவர்களில் 2682 பேர்- 70 சதவீதமானவர்கள் வடகிழக்கு மாகாணப் பல்கலைக்கழகங்களிலேயே (யாழ், கிழக்கிலங்கை, தென்கிழக்கு) கல்வி பயிலுகின்றனர்.

**மொழிவழி அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர் - 1996**.

| | | |
|---|---|---|
| 1. | தமிழ்மொழிவழி மாணவர் | - 3536 |
| 2. | ஆங்கில மொழிவழி மாணவர் | - 12711 |
| 3. | சிங்கள மொழிவழி மாணவர் | - 19220 |

**தமிழ்வழி மாணவர் - பல்கலைக்கழக வகைப்படி 1996**

| | | |
|---|---|---|
| 1. | கொழும்பு பல்கலைக்கழகம் | - 467 |
| 2. | பேராதனைப் பல்கலைக்கழகம் | - 373 |
| 3. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | - 1736 |
| 4. | கிழக்குப் பல்கலைக்கழகம் | - 576 |
| 5. | தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | - 370- |

ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைந்நூல் - 1997.

இவ் விபரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து தமிழ்வழிக் கல்வியை மேலும் செம்மைப்படுத்தி உறுதி செய்யும் பணியில்

வடகிழக்குப் பல்கலைக் கழகங்கள் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். 21ஆம் நூற்றாண்டாகிய தகவல் மைய நூற்றாண்டில் தமிழ் மொழியை விஞ்ஞான, தொழிநுட்ப, தகவல் தொழிநுட்பத்துறைகளில் பயன்படுத்தும் வகையில் வளர்ச்சி பெறச் செய்யும் பொறுப்பு இப் பல்கலைக் கழகங்களிடமே உண்டு. எனது நோக்கில் யாழ். பல்கலைக் கழகம் இதற்கான தலைமைத்துவத்தை வழங்கிட வேண்டும்.

## ஆய்வாளர் பற்றாக்குறை.

உயர் கல்வியையும் ஆராய்ச்சிப் பணியையும் தமிழ் மாணவர்களின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டுடன் தொடர்புபடுத்தி நோக்கும் போது மற்றொரு எதிர்மறைச் செல்நெறியும் தென்படுகின்றது. ஆராய்ச்சியும், அபிவிருத்தியும் இன்று இணைந்த முறையில் கருத்தில் கொள்ளப்படுகின்றன. ஆராய்ச்சி முடிவுகள், தரவுகள் என்பவற்றின் அடிப்படையிலேயே இன்று அபிவிருத்தித் திட்டங்கள் வரையப்படுகின்றன. குறிப்பாக வரலாறு, புவியியல், பொருளியல், சமூகவியல், கல்வியியல், போன்ற துறைகளில் செய்யப்படும் ஆய்வுகள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவசியமானவை. இவற்றின் பயனை விபரித்துக் கூற வேண்டியதில்லை. ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கடந்த மூன்று தசாப்தங்களின் பொதுவான உயர்கல்வி வளர்ச்சி, குறிப்பாக சமூக அறிவியல் சார்ந்த உயர்கல்வி வளர்ச்சி இவ்வாய்வுகளில் ஈடுபடத் தேவையான ஆராய்ச்சிக் கல்விமான்களை அதிக அளவில் உருவாக்கவில்லை. இத்துறைகளைச் சார்ந்த முதலாம், இரண்டாம் தலைமுறை அறிஞர்கள் பலர் தேசிய, சர்வதேசிய ரீதியாகப் புகழ் பெற்ற ஆய்வாளர்களாகப் பரிணமித்த போதிலும் அவர்களில் பலர் வெளிநாடு சென்றுவிட்டனர்; இன்னும் பலர் இளைப்பாறிவிட்டனர். இலங்கை வாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கென்று ஒரு வரலாறு, புவியியல், பொருளியல், இலக்கியம், சமூவியல், கல்வியியல் சார்ந்த தனிச் சிறப்பான பரிமாணங்கள் உண்டு. தேசிய ரீதியாக செய்யப்படும் ஆராய்ச்சிகள் இப்பரிமாணங்களை முழு அளவில் வெளிக் கொணர்வதாயில்லை. இவ்வாய்வுகளிலிருந்து தமிழர் பற்றிய இப்பரிமாணங்களின் யதார்த்தநிலைமைகளை அறிந்து கொள்ள முடியாதுள்ளது. இப் பல்வேறுதுறை சார்ந்த சிறப்பறிஞர்களின் தொகை தமிழர் மத்தியில் பற்றாக்குறையாக உள்ளமையால் ஆய்வுப் பணிகளை

விரிவான முறையில் செய்ய முடியாதுள்ளது. எனவே இத்துறைகள் சார்ந்த சிறப்பறிஞர்களை உருவாக்கும் பணியையும் வடகிழக்கு பல்கலைக்கழகங்களே ஏற்க வேண்டியுள்ளது. இன்று காணப்படும் சமூக அறிவியலாளர்களின் தொகை, அவர்களுடைய ஆய்வுத் தகுதிகள், ஆய்வுப்பணிகள் (எழுத்துக்கள், பிரசுரங்கள்) பற்றிய விபரங்களடங்கிய பேரேடொன்று தயாரிக்கப்படல் வேண்டும். யாழ் பல்கலைக் கழக ஆய்வறிஞர்கள் தொடங்கியுள்ள "தமிழியல் ஆய்வு" பற்றிய ஆராய்ச்சிப் பணி இந்நோக்கத்தினை உள்ளடக்கி அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது. புதிய தலைமுறையினரான சமூக அறிவியல் ஆய்வறிஞர்களை உருவாக்குவதிலும் தமிழ் மக்கள் பற்றிய புதிய சமூக பொருளாதார ஆய்வுத்தளமொன்றை ஏற்படுத்துவதிலும் யாழ் பல்கலைக்கழகமே தலைமை தாங்க வேண்டும் என்பது எமது வேண்டுகோள். தீவளாவிய ரீதியில் இதுவரைகாலமும் தமிழர், தமிழர் வாழ்வியல் தொடர்பாகச் செய்யப்பட்ட அனைத்து ஆய்வுகளும் முறையாக ஆவணப்படுத்தும் பணியை யாழ். பல்கலைக் கழகமே மேற்கொள்ள வேண்டும். இப் பணி தொடர்ந்து நிகழ நாடளாவியரீதியில் பணிபுரியும் அனைத்து தமிழ் ஆய்வாளர்களுக்கு தேவையான தலைமைத்துவத்தையும் சீரிய வழிகாட்டலையும் யாழ். பல்கலைக்கழகமே வழங்கிட வேண்டும். இவ்வனைத்துத் தமிழ் ஆராய்ச்சியாளரையும் இனங்காணல் அவர்களுடன் தொடர்பு கொள்ளல், அவர்களுக்கான பொது ஆய்வுக்களமொன்றை அமைத்தல் என்பன தமிழர்களின் எதிர்கால மேம்பாட்டுக்காக யாழ். பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய சில சீரிய பணிகளாகும்.

### யாழ் மாணவரின் விசேட செயலாற்றம்.

மீண்டும், பல்கலைக்கழக மாணவர் பற்றிய மற்றொரு செல்நெறியை இவ்விடத்துக் குறிப்பிடுதல் வேண்டும். அச் செல்நெறியானது யாழ் மாவட்ட க.பொ.த உ/த மாணவர்களின் பரீட்சைச் சித்தி, செயலாற்றம் பற்றியதாகும். பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்தவரையில் யாழ்மாணவர்கள் வாய்ப்பான ஒரு வளர்ச்சியடைந்த கல்விப்பாரம்பரியத்தை கொண்டவர்கள்; கல்வித்துறையில் பல்கலைக் கழக அனுமதியில் பல சாதனைகளை நிகழ்த்தியவர்கள்; திறமைச் சித்தி அடிப்படையில் ஒரு

காலத்தில் முக்கிய பீடங்களில் ( மருத்துவம், பொறியியல்) அனுமதி பெற்ற மாணவர்களில் அவர்கள் 40 சதவீதத்தினராகவும் இருந்தனர்; 1970 தொடக்கம் பல்வேறு புதிய அனுமதிக் கொள்கைகள் அவர்களுடைய கல்விச் சாதனைகளுக்கு சவாலாக அமைந்தன; ஏனைய வளர்ச்சியடைந்த கல்வி மாவட்டங்களுடன் கடும் போட்டியை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்; வடபகுதியின் போர் நிலமை, அமைதியற்ற சூழல் என்பன அவர்களுடைய கல்விச் சித்திகளைப் பெரிதும் பாதித்துவந்துள்ளன; அடிக்கடி நிகழ்ந்த இடப்பெயர்வுகளினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் பல; எல்லாவற்றிற்கும் மேலாகப் பாடசாலைகளில் ஆசிரியர் மற்றும் அடிப்படை வளங்களின் பற்றாக்குறையால் ஏற்பட்டு வந்துள்ள பாதிப்புகளும் கணிசமானவை . இப்பின்புலத்தில் யாழ். மாவட்ட மாணவர்கள் தமது முழு ஆற்றலையும் கல்விப்பணியில் செலுத்தமுடியாமல் இருந்ததையும் அவர்களுடைய அனுமதியில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சி பற்றியும் யாவரும் கவலையுடன் நோக்கி வந்துள்ளோம். யாழ் மாவட்டம் கல்வித்துறையில் பின்தங்கிய 13 மாவட்டங்களுள் ஒன்றாகவுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் யாழ் மாவட்டக் கல்வியின் வளர்ச்சி, வடகிழக்குத் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பவற்றின் பெயரால் இரு சாராருக்கும் விடுக்கும் வேண்டுகோள். உடனடியாகப் போரை நிறுத்துங்கள் அமைதிப் பேச்சுக்கு முன்வாருங்கள்; கல்வி மற்றும் சமூகவளர்ச்சிக்கான கௌரவமான நிலைத்த ஒரு தீர்வைக்காணுங்கள் என்பது எனது வேண்டுகோளாகும்.

இவ்வெதிர்மறைப் போக்கு ஒரு புறமிருக்க யாழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி பற்றிய அண்மைக்காலத் தரவுகள் ஒரு வகையில் பெருமிதங்கொள்ளச் செய்கின்றன. ப.மா. ஆணைக்குழுவின் தரவுகளிலிருந்து இது தொடர்பாக சில முக்கிய விபரங்களை கீழே தொகுத்துத் தருகின்றேன்:

- இன்று அனுமதி பெறும் மாணவர்களில் 40 வீதமானவர்கள் திறமைச்சித்தியின் அடிப்படையில் அனுமதி பெறுகின்றனர். 25 மாவட்டங்களில் திறமைச் சித்தி அடிப்படையில் அதிக மாணவர்களை அனுப்பும் இரண்டாவது மாவட்டம் யாழ்ப்பாணமாகும்.

**1995/96 க்குரிய திறமைச் சித்தி விபரங்கள் பின்வருமாறு.**

| மாவட்டம் | திறமைச் சித்தியினால் அனுமதி பெறும் மாணவர் தொகை. |
|---|---|
| 1. கொழும்பு | 816 |
| 2. யாழ்ப்பாணம் | 641 |
| 3. குருநாகல் | 453 |
| 4. கண்டி | 330 |
| 5. மாத்தறை | 306 |
| 6. காலி | 265 |
| 7. கம்பஹா | 252 |
| 8. களுத்துறை | 207 |
| 9. கேகாலை | 209 |

❖ ஏனைய 16 மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டோர் ஒரு மாவட்டத்துக்கு ௨௦௦க்கு கீழ்.
ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைந்நூல் -1997

- இவ்வாறே மருத்துவம், பொறியியல், பௌதீக விஞ்ஞானம் முதலிய துறைகளுக்கான திறமைச் சித்தி அனுமதியில் யாழ் மாவட்டம் நாட்டின் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. (1996). உதாரணமாக:

| மாவட்டம் | திறமைச் சித்தி அனுமதி தொகை. பாடத்துறை | | |
|---|---|---|---|
| | மருத்துவம் | பொறியியல் | பௌதீக விஞ்ஞானம் |
| 1.கொழும்பு | 146 | 95 | 114 |
| 2.யாழ்ப்பாணம் | 31 | 86 | 61 |
| 3.கண்டி | 32 | 18 | 12 |
| 4.காலி | 20 | 18 | 15 |
| 5.குருநாகல் | 22 | 04 | 01 |

ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைந்நூல் - 1997

- கலை, முகாமைத்துவம், வர்த்தகவியல் போன்ற துறைகளிலும் யாழ். மாவட்டம் முன்னணியிலிருப்பதை பின்வரும் தரவு காட்டும் (1996):

- மற்றொரு முக்கிய அம்சம் நாடளாவிய ரீதியில் அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் கணிசமானவர்கள் யாழ் மாவட்டத்திலிருந்தே அனுமதி பெறுகின்றனர்.

| தமிழ் மாணவர் அனுமதி | 1992/93 | 1993/94 | 1994/95 | 1995/96 |
|---|---|---|---|---|
| 1. யாழ்.மாவட்டம் | 399 | 568 | 566 | 993 |
| 2.ஏனைய சகல மாவட்டங்கள். | 867 | 1054 | 1095 | 1565 |

ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைந்நூல் -1997

அனுமதி பெறும் தமிழ் மாணவர்களில் 50 சதவீதத்துக்கு அதிகமானவர்கள் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இதில் ஒரு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு.

இன்றைய பல்கலைக்கழக அமைப்புக்கென பல தசாப்பதங்களாகப் பல ஆயிரம் கோடி ரூபாய் மனித வளமும், பௌதீக வளமும் உயர் கல்விக்காக திரட்டப்பட்டுள்ளது. (1990இல் 106 கோடி ரூபாய், 1993இல் 213 கோடி ரூபாய், 1995 இல் 283 கோடி ரூபாய். *பார்க்க: ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கையேடு -1997)*

இத் தேசிய உயர்கல்வி வளத்திலும், செல்வத்திலும் தமிழர்களுக்கான பங்கினை அனுபவிக்க குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்ற போதிய மாணவர்கள் அவசியம். புள்ளி விபரங்களின்படி போரினாலும் பொருளாதார இன்னல்களினாலும் எவ்வளவுதான் யாழ்மாவட்டம் இதுவரை இழந்திருந்தாலும் மூதாதையர் வளர்த்தெடுத்த உயர்கல்விப்பாரம்பரியத்தை யாழ் இளைஞர்கள் இன்னும் போற்றியே வருகின்றனர். எத்தகைய பாதகசூழ்நிலையிலும் கல்வியே கருந்தனம் எனக் கங்கணம்கட்டிக் கொண்டு பணிபுரிவதால் பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றி வருகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக உயர்கல்வியில் ஏனைய சகல மாவட்டங்களுக்கும் முன்மாதிரியாக யாழ் மாவட்டம் விளங்க காரணமாக அமைகின்ற யாழ் குடாநாட்டு ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், கல்வி அதிகாரிகளையும் பாராட்டுகின்றேன்.

## மட்டுப்படுத்தப்பட்டுள்ள உயர்கல்வி வாய்ப்புக்கள்.

மேற்கூறிய செல்நெறிகளுடன் தொடர்புடைய மற்றொரு இலங்கைக்குரிய செல்நெறி உயர்கல்வியில் மட்டுப்படுத்தப்பட்ட விரிவாக்கமாகும். இலங்கைப் பாடசாலைக்கல்வி வளர்ச்சியில் ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த இடத்தை வகித்த போதிலும் (1960களில்) உயர்கல்வி வாய்ப்புகளை விரிவு செய்ய தவறிவிட்டது. ஆசியப் பிராந்தியத்தில் ஆப்கானிஸ்தான், லாவோஸ், முதலிய கல்வியில் பின் தங்கியுள்ள நாடுகளுடன் ஒப்பிடும் நிலையிலேயே இலங்கை இன்று இருக்கின்றது. உயர்கல்விக்கான வளங்களின் பற்றாக்குறை, பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புப் பிரச்சினை, உயர்கல்வியில் சமூக தனியாள் விளைவு வீதம் (Rate of return) ஆரம்பக் கல்வியின் விளைவு வீதத்தைவிட குறைவாக இருந்தமை போன்ற காரணங்களால் உயர்கல்வியின் விரிவில் அக்கறை செலுத்தப்படவில்லை. விளைவு வீத ஆய்வுகள் உயர்கல்வியில் இடப்படும் முதலீடானது பொருளியல் நோக்கில் இழப்புக்களையே ஏற்படுத்துவதாகத் தெரிவித்தன. இந்நிலையில் அரசாங்கம் உயர்கல்வியை மேலும் விரிவு செய்வதில் அக்கறை செலுத்தவில்லை. உயர்கல்வி வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலில் பொருளாதாரக் காரணிகளின் நிர்ப்பந்தம் மிகுந்து காணப்பட்டது. கல்விக்கான வளங்கள் அதிக விளைவு வீதத்தைத் தந்த ஆரம்பக் கல்வி நிலைக்கு

ஒதுக்கப்பட்டன. இதன் நீண்ட கால விளைவாக இன்று இலங்கையில் உயர்கல்வி வயதெல்லையினரின் இரண்டு வீதத்திற்கும் குறைவானவர்களே உயர்கல்வி நிலையங்களில் கல்வி பயில்கின்றனர். ஐக்கிய அமெரிக்காவிலும்,கனடாவிலும் இவ்வயதெல்லையிலுள்ள இளைஞர்களில் 65 வீதமானவர்களும், ஜப்பானில் 35 வீதமானவர்களும், மேற்குஐரோப்பிய நாடுகளில் 25 வீதமானவர்களும், ஏனைய தென்னாசிய நாடுகளில் 5வீதமானவர்களும் உயர்கல்வி நிலையங்களில் சேர்ந்து பயிலுகின்றனர். புதிய தென்கிழக்காசியாவின் புதிய கைத்தொழில் நாடுகளில் இவ்வீதாசாரம் 8ஆகவுள்ளது. இலங்கையில் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெறுவோரில் 15 சதவீதமானவர்களுக்கு மட்டுமே இறுதியில் அனுமதி கிட்டுவதை பின்வரும் புள்ளி விபரம் காட்டும்.

**பல்கலைக்கழக அனுமதி பெறத் தகுதி பெற்றோர்.**

| | 1993/94 | 1994/95 | 1995/96 |
|---|---|---|---|
| 1. தகுதி பெற்றோர் | 55144 | 59292 | 56703 |
| 2. அனுமதி பெற்றோர் | 8015 | 8663 | 9190 |
| 3. சதவீதம் | 14.53 | 14.61 | 16.21 |

ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கைந்நூல் - 1997

இத்தகைய கட்டுப்படுத்தப்பட்ட உயர்கல்வி வளர்ச்சியானது ஏராளமான மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகளை நிராகரித்தது என்பதே வரலாறு. பாடசாலைக் கல்வியானது இறுதியில் உயர்கல்விக்கே இட்டுச்செல்லும் இலக்குடன் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உயர்கல்வி நிறுவனங்கள் உயர்கல்விக்கான புதிய கேள்விக்கு ஏற்ப விரிவடையவில்லை. வடஇலங்கையில் மட்டுமன்றி தென்இலங்கையிலும் உயர்கல்வி அவாவுடன் செயற்பட்ட மாணவர்களில் பெரும் பாலானோர் விரக்தியுற்றனர். இலங்கையில் வடக்கு தெற்கு ஆகிய இருபுலங்களிலும் தீவிரவாத இயக்கங்களில் இளைஞர்கள் துரிதமாக

சேர்ந்தமைக்கு இவ்வுயர்கல்விக் கட்டுப்பாட்டுக் கொள்கையும் ஒரு முக்கிய காரணம் என்பதைப் பல ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கையின் உயர்கல்வி வரலாற்றில் தமிழ்மாணவர், தமிழ்மொழி எனபவற்றிற்குரிய இடம் பற்றிய சில கருத்துக்களைக் கூறி அடுத்து இன்று உலகளாவியரீதியில் உயர் கல்விச் செயற்பாட்டில் புதிய செல்நெறிகளாக விளங்குவன எவை? அச் செல்நெறிகள் எமக்கு எந்தளவு பொருத்தமானவை? இவை பற்றி ஆராய அச்செல்நெறிகள் பற்றிய புரிந்துணர்வு முதலில் தேவைப்படுகின்றது.

**உயர்கல்வியும் சமூகமும்.**

உலகளாவிய ரீதியில் இன்று வலியுறுத்தப்படும் முக்கிய செல்நெறியானது பேராசிரியர் வித்தியானந்தன் வகுத்த உயர்கல்வி விதியுடன் ஒத்துச் செல்வதாகும். அன்னார் 1960களிலேயே பல்கலைக் கழகங்களின் பணியையும் தொழிற்பாட்டையும் சமூகமேம்பாடு நோக்கி முன்னெடுத்துச் சென்றார் என்றால் இன்றைய உயர்கல்வி பற்றிய அனைத்துலகச் சிந்தனைகளும், ஆவணங்களும் பல்கலைக் கழகங்களின் சமூகப் பணியையே முக்கியமாக வலியுறுத்துகின்றன. 1998 ஒக்டோபர் மாதம் பாரிசில் கூடிய உயர்கல்வி பற்றிய அனைத்துலக மகாநாட்டில் உயர்கல்வி பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை இச் சமூக அம்சத்தைப் பெரிதும் வலியுறுத்துகின்றது.

"உயர்கல்வி நிறுவனங்கள், பெற்றோர், பாடசாலைகள், மாணவர்கள் சமூக- பொருளாதாரக் குழுக்கள், சமுதாயக்குழுக்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து கூட்டாகச் (partnership) செயற்படல் வேண்டும் " என்றும்

"உயர்கல்வியானது சமூகத்தைப் பொறுத்தவரையிலான தனது பங்கினையும் சேவை நோக்கினையும் உறுதி செய்துகொள்ள வேண்டும்" என்றும்

"விசேடமாக உயர்கல்வியானது வறுமை, நோய், வன்செயல், எழுத்தறிவின்மை என்பவற்றை ஒழித்துக் கட்டும் செயற்பாடுகளை நோக்காகக் கொள்ளல் வேண்டும்" என்றும் அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (Higher Education in Europe, Vol XXIII, No4, 1998) உயர்கல்வியானது எதிர் காலத்தில் வன்செயல்களும் சுரண்டலுமில்லாத ஒரு புதிய சமூகத்தை உருவாக்க உதவ வேண்டும்; அத்தகைய புதிய சமூகத்திற்கு ஊக்கத்தையும் பண்பட்ட குணாதிசயங்களையும்,

மனித நேய சிந்தனையையும் கொண்ட தனியாட்கள் தேவை. அத்தகையோரைக் கொண்ட புதிய சமூகத்ததை உருவாக்குவதில் உயர்கல்விக்கு முக்கிய பங்குண்டென்பது நவீன கருத்து.

21ஆம் நூற்றாண்டில் உயர்கல்வியின் பங்களிப்புப் பற்றிச் சிந்திக்கும் எதிர்காலவியியலாளர்கள் சகல உயர்தொழில் (professional) மற்றும் விஞ்ஞான முயற்சிகளும் மாணவர் மேம்பாட்டை மட்டுமன்றி சமூகத்தை நோக்காக கொண்டமைதல் வேண்டும்; பிரச்சினையை இனங்கண்டு வரையறை செய்தல், அவற்றிற்கான தீர்வுகளைத் தேடல், தீர்வுகளை நடைமுறைப் படுத்தல், போன்ற உயர்கல்வி முறையின் பணிகள் சமூகத்துக்கப்பால் நடைபெறமுடியாது. ஒரு நிறுவனத்தின் நோக்கங்களும் செயற்பாடுகளும் தவிர்க்க முடியாதபடி சமூகத்தைச் சுற்றியே அமையும். எனவே எத்துறையில் பயில்பவராயினும் சமூக அறிவியலையும் ஓரளவுக்குப் பயில வேண்டும் என்பது இன்றைய உயர்கல்விச் சிந்தனை.

உயர்கல்வி முறையானது இன்று சூழவுள்ள சமூகத்தின் மேம்பாட்டுடன் மட்டுமன்றி உலகசமூகத்தின் (global society) பரிமாணங்களுடனும் தொடர்புபடுத்தப்படுகின்றது. இன்று தெளிவாக வரையறுத்துக் கூறக்கூடிய ஒரே சமூகம் உலகசமூகமேயாகும். இன்று உலகில் ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் நிலமை ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ள நிலையில் தேசிய, பிராந்திய மற்றும் உள்ளூர் சமூகங்கள் அனைத்தும் உலகசமூகத்தில் தங்கியுள்ள துணைத் தொகுதிகளாகக் கொள்ளப்படல் வேண்டும். உலகசமூகமென்பது பல உலக நாடுகளின் தொகுதியன்று; இதற்கு மாறாக உலக சமூகமென்பது அனைத்து சமூகங்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் சாதனமாகும். தேசிய சமூகங்களின் அபிவிருத்தியானது இன்று உலக சமூகத்தாலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றது. இந்நிலையில் சகல துறைகளில் பயிலும் உயர்கல்வி மாணவர்கள் இத்தகைய உலக சமூகம் பற்றியும், அது எவ்வாறு இயங்குகின்றது என்பது பற்றியும் நிறைவான அறிவுடையோராய் விளங்குதல் வேண்டும் என்பது எதிர்காலவியலாளரின் அவா.

**வாழ்க்கை நீடித்த கல்வி.**

பிரஞ்சு நாட்டுப் பல்கலைக்கழகங்கள் இச் சமூகப்பணியையும், சமூக அம்சத்தையும் பொறுத்தவரையில் ஒரு முக்கிய பணியைச் செய்யவுள்ளன. 21ஆம் நூற்றாண்டின் பிரஞ்சுப் பல்கலைக்கழகங்கள், சமூகத்தில் வாழுகின்ற வளர்ந்தோரின் வாழ்க்கை நீடித்த கல்வித் தேவைகளை நிறைவு செய்யும் முறையில் கல்வி ஏற்பாடுகளை விரிவு செய்யவுள்ளன. இவ்வளர்ந்தோரின் தொடர் கல்விக்கென இப் பல்கலைக்கழகங்கள் தமது கணிசமான அளவு நேரத்தைச் செலவிடவுள்ளன. 21ஆம் நூற்றாண்டில் உயர்கல்வித் துறையில் ஏற்படவுள்ள முக்கிய மாற்றங்களுள் பிரதானமானது வாழ்க்கை நீடித்த கல்விக்கான ஏற்பாடுகளாகும். இவை முறை சாராத முறையில் கல்வி ஏற்பாடுகளாகவும் தொலைக் கல்வி எற்பாடுகளாகவும் விளங்கும். சமூகத்திலுள்ள வர்த்தக கைத்தொழில் நிறுவனங்களின் ஊழியர்களுக்கான தொடர்கல்வியை வழங்கும் பணியானது பல்கலைக்கழகங்களையும் அந்நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்கின்றது. இதனால் 21ஆம் நூற்றாண்டில் பல்கலைக்கழகங்களுக்கும் வர்த்தக தொழிற்றுறைகளுக்குமிடையிலான தொடர்புகள் எதிர்கால உயர்கல்வி வளர்ச்சிக்கான ஒரு முக்கிய அடித்தளமென்றும் கூறப்படுகின்றது. இத்தகைய செல்நெறிகளின் சாயல்கள் பலவற்றைத் தற்போதும் காணமுடிகின்றது. எதிர்காலத்தில் வளர்ந்தோருக்கான தொடர்கல்வியை வழங்கி வாழ்க்கை நீடித்த கல்வியின் இலக்குகளுடன் உயர்கல்வி நிலையங்கள் தம்மை இணைக்கும் போது தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதாகின்றது. வாழ்க்கை நீடித்த கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் போது இயல்பாகவே தொழில் நிறுவனங்களின் ஈடுபாடும் அக்கறையும் அதில் தேவைப்படுகின்றன. அவர்களுடைய ஊழியர்களுக்கே வாழ்க்கை நீடித்த கல்வியென்பதால் அவ்வகையான கல்வியை வரையறை செய்தல், குறிக்கோள்களை உருவாக்கல், பாடஏற்பாட்டைத் தயாரித்தல், பயிற்சி நெறிகளை ஒழுங்கு செய்தல் என்னும் பணிகளில் தொழில் நிறுவனங்களும் ஈடுபடவேண்டியுள்ளது.

## தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு.

இவ்வாறான முறையில் வெளி உலகத் தொழில் நிறுவனங்களுடன் உயர்கல்வி நிலையங்கள் ஏற்படுத்தும் தொடர்பானது 21ஆம் நூற்றாண்டின் முக்கிய உயர்கல்வி விதியாகவும் (rule) செல்நெறியாகவும் அமைய மற்றொரு காரணமும் உண்டு. மரபு வழியாக உயர்தரமான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் தாம் கற்கும் துறைசார்ந்த முறையியலைக் (methodologies) கற்றுக் கொள்ளவும் மாணவர்கள் பல்கலைக் கழகங்களை நாடினர். ஆனால் இன்று மாணவர்கள் இவ்விருவிடயங்களை மட்டும் நாடிப் பல்கலைக்கழகங்களுக்கு வருவதில்லை. அவர்கள் இவ்விருவிடயங்களுடன் பல்கலைக்கழகங்கள் சில தொழிற்றகைமைகளையும் வழங்குதல் (preparation) வேண்டும் எனக் கோருகின்றனர். இதுவே கற்கைநெறிகளைத் தொழில்மயமாக்கும் செயற்பாடு (Professionalization of studies) என்று கூறப்படுகின்றது. பல்கலைக் கழகங்கள் இப்பணியைச் செவ்வனே ஆற்றத் தம்மை ஆயத்தம் செய்யவேண்டியுள்ளது. மாணவர் கோருகின்ற தொழில் தகைமைகளை வழங்கும் ஆற்றலும் திறனும் இன்றைய பல்கலைக்கழக ஆசிரியர்களிடம் இருக்குமென எதிர்பார்க்க முடியாது. எனவே அப் பல்கலைக்கழகங்கள் இவ்விடயத்தில் வெளியிலுள்ள நிறுவனங்களின் ஒத்துழைப்பையே நாடவேண்டியுள்ளது. எனவேதான் பல்கலைக்கழகங்களும் தொழில்நிறுவனங்களும் இணைந்து செயலாற்றும் அவசியம் தோன்றியுள்ளது. மரபுவழியான பயிற்சியையும் கல்வித்தகுதிகளையுமுடைய பல்கலைக் கழக ஆசிரியர்கள் தொடர்ந்து தமது மரபுவழிக் கற்பித்தலை செய்யுமாறு விட்டு விட்டு புதிய ஆசிரிய வளத்தை தொழில்நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய தேவை எழுந்துள்ளது. இப்புதிய மனித வளமும் தொழில்த்துறைத் தொடர்புகளும் பல்கலைக்கழகப் பணிகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும். தென்னிலங்கைப் பல்கலைக்கழங்களில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புகள் தொழில்வழிகாட்டல், தொழில் தகைமைகளை வழங்கும் முயற்சிகள் போன்ற புதிய தேவைகள் காரணமாகத் தொழில் நிறுவனங்களுடன் ஏற்கனவே இத்தகைய இணைப்பு ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆராய்ச்சி

வளர்ந்தோரின் தொடர்கல்வியில் காட்டப்படும் புதிய ஈடுபாடு, தொழில்நிறுவனங்களுடன் ஏற்படுத்தப்பட்டுவரும் புதிய இணைப்பு என்னும் இச்செல்நெறிகள் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பணிகளிலும் புதிய பரிமாணங்கள் தென்படக் காரணமாகவுள்ளன. பல்கலைக்கழகங்களில் இடம்பெறவுள்ள பிரயோக ஆராய்ச்சிகள் (applied research) தொழில் நிறுவனங்களின் குறிப்பான தேவைகளையொட்டி அமையும் வாய்ப்புகள் தென்படுகின்றன. அத்துடன் வளர்ந்தோருக்கான தொடர்கல்வி ஏற்பாடுகள், அவற்றில் தொடர்பாடல் சாதனங்களின் பங்கு என்னும் புதிய விடயங்களில் சர்வதேசரீதியாக ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன.

## கற்றல் பணிக்கு முக்கியத்துவம்.

வாழ்க்கை நீடித்த கல்வி என்னும் புதிய தேவை காரணமாகப் பல்கலைக்கழகங்கள் மாணவர்கள் சுய கல்வியில் ஈடுபடத் தேவையான கற்றல் திறன்களை வழங்கவேண்டியுள்ளது; அத்துடன் வழமையான பட்டதாரி மாணவர்களுக்கு அப்பால் வளர்ந்தோரின் தொடர்கல்வியில் பல்கலைக்கழகங்கள் ஈடுபடவேண்டிய நிலமையும் தோன்றியுள்ளது. இவர்கள் தமது முன்னைய கல்வி, தொழில்துறை அனுபவங்கள் என்பவற்றின் காரணமாகப் பட்டதாரி மாணவர்களைவிட வேறுபட்டவர்கள், தொழில் திறன்களையும் வேலை அனுபவங்களையும் பெற்றவர்கள். இதனால் பல்கலைக் கழக ஆசிரியர்கள் இப்புதிய வித்தியாசமான மாணவர்களைப் பொறுத்தவரையில் புதிய அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் நாடவேண்டியுள்ளது. முக்கியமாக இவ்வளர்ந்தோரின் கல்வித்தேவைகள் யாவை? அவர்கள் பெற்றுள்ள முனனறிவும் அனுபவங்களும் யாவை? அவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள்? இவ்வினாக்களுக்கான விடைகளின் அடிப்படையிலேயே பல்கலைக்கழகங்கள் தமது கற்பித்தல் முறைகளை உருவாக்க வேணடியுள்ளது. இந்நிலையில் இதுவரைகாலமும் ஆசிரியரையும் அவரது கற்பித்தல் செயற்ப்பாட்டையும் முன்னிலைப்படுத்தி வந்த பல்கலைக்கழங்கள் தற்போது கற்போன், அவனுடைய கற்பித்தல் செயற்பாடு (learner and learning process) என்பவற்றிலேயே கூடிய அக்கறை செலுத்தும் ஒரு புதிய செல்நெறி உருவாகி வருகின்றது.

கற்பித்தலை விடுத்துக் கற்றலுக்கு முக்கியத்துவம் (shift from teaching to learning) வழங்கும் செல்நெறி என்று இது சுட்டப்படுகின்றது. வெவ்வேறு அறிவு மட்டங்களையும் அனுபவங்களையும் உடைய வளர்ந்தோருக்கு வழமையான வகுப்பறை விரிவுரை முறை பொருந்தாது. எனவே அவர்களைப் பொறுத்தவரையில் நவீன தொடர்பாடல் கருவிகளைப் (தொலைத்தொடர்புக் கருவிகள், கணிப்பொறி, வலைத்தொகுதி, இணையம்- internet) பயன்படுத்தப்படுகின்ற தொலைக்கல்வி முறை, சுயகற்றல்முறை (self–learning) என்பன முக்கியத்துவம் பெற்று வருகின்றன. குழுக்களாக வகுப்பறையில் அமர்ந்து கற்பதைவிட மாணவர்கள் தனியாட்களாக சுயமாக கற்கும் செயற்பாடு தான் (individualized learning) இனி முக்கியத்துவம் பெறவுள்ள மற்றொரு செல்நெறியாகும்.

### உயர்கல்வியும் புதிய தகவல்தொழில்நுட்பமும்.

20ஆம் நூற்றாண்டின் புரட்சிகரமான படைப்பான கணிப்பொறியின் விரிவான பயன்பாடு உயர்கல்வியின் மற்றொரு பிரதான செல்நெறியாகும். ஓர் அத்தியாவசியமான அறிவுசார் கருவியாக இன்று உருவெடுத்துள்ள கணிப்பொறியானது எம்மைச் சகல நூல்கள், சஞ்சிகைகள், நூல்நிலையங்கள், நிபுணர்கள், அருங்காட்சியகங்கள் என்பவற்றுடன் தொடர்புபடுத்திக் கொள்ள உதவுகின்றது. ஆரம்பத்தில் போர்க் கருவிகளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டாலும் இன்று அக் கருவி பிரதானமாகக் கற்றலுக்கு உதவுகின்றது. கணிப் பொறி தொடர்பான நிரலித்தல், மொழிகள், வலு (வேகம், தகவலைக் களஞ்சியப்படுத்தல்), தொடர்பாடல், வரைகலை (graphics) என்பவற்றில் ஏற்பட்டு வந்துள்ள துரிதமான முன்னேற்றம் மாணவர்கள் யாவரையுமே கணிப்பொறியை நாடச்செய்துள்ளது. கணிப் பொறியானது ஒரு தொழிநுட்பக் கருவி; ஆத்மா இல்லாதது; கைத்தொழில் நாடுகளிலேயே அதிகம் பயன்படுகிறது என்ற முறையில் பல புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியது என்ற விமர்சனத்துக்குள்ளானாலும் அக் கருவி நவீன நாகரிகத்தின் உன்னத படைப்பாக விளங்குகின்றது. நவீன தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் காரணமாக அறிவு விருத்தி செய்யப்பட்டு, கைவரப்பெற்று, (acquire) பரப்பப்படும் (delivered) வழிமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

உயர்கல்வியைப் பொறுத்தவரையில் புதிய தொழில்நுட்பத்தினால் பாட ஏற்பாடு, உள்ளடக்கம், கற்பித்தல் முறைகள், உயர்கல்வி வாய்ப்புகள் என்பவற்றில் புத்தாக்கங்கள் உருவாகவுள்ளன. இப்புதிய தொழில்நுட்பமானது ஆசிரியர்களின் தேவையைக் குறைத்து விடாது அவர்களின் பங்களிப்பில் மாற்றங்ளை ஏற்படுத்தும். பல்கலைக்கழகங்கள் புதிய தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி உயர்கல்வி தராதரங்களை மேம்படுத்த முயல வேண்டும். சமநீதி, சமவாய்ப்பு, திறந்த தன்மை, சர்வதேச உதவி, ஒத்துழைப்பு, என்பவற்றை நிலை நாட்டவேண்டும். நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பல்கலைக்கழக ஆய்வாளர்களின் கல்விப்பணிக்கும் மாணவர்களின் கற்றல் பணிக்கும் உதவுவதுடன் அதன் பணி நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாக நவீன தொழில்நுட்பமானது நேரடியாக மனித ஆற்றலை விரிவுபடுத்துகின்றது. முன்பு நூல்கள் செய்த அதே பணியை இணையமும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பமும் செய்கின்றன. இவை மாணவர்களின் கற்கும் ஆற்றலை வலுப்படுத்த உதவுகின்றன. அவர்கள் இக்கருவிகளினூடாக உலகெங்குமுள்ள சமூகங்களுடன் கல்விரீதியாக தொடர்புகளை ஏற்படுத்தி "கற்கும் சமூகங்களை" (learning communities) உருவாக்கி அவற்றில் பங்கு கொள்ளவும் முடியும். உயர்கல்வி வாய்ப்புகளைத் தெரிவு செய்யப்பட்ட சில நிறுவனங்கள்- தாம் வழங்க முடியுமென்ற நிலை நீங்க புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக அமையும். துரிதமான தொழில்நுட்ப மாற்றமும் அதன் சர்வதேச பண்பும் பரிமாணமும் மரபுவழிப் பல்கலைக்கழகங்களே அறிவாக்க நிலையங்கள் என்ற ஏக போக நிலைமையைச் சிதைக்கக் கூடியன. கல்விசார் நோக்கங்களுக்காகப் புதிய தகவல் தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தும் போது ஏறபடக்கூடிய சிறந்த பெறுபேறுகள் நன்மைகளின் காரணமாக இத்தொழிநுட்பங்கள் நாட்டின் சகல பிராந்தியங்களையும் மக்கள் பிரிவினர்களை சென்றடைவது உறுதி செய்யப்படல் வேண்டும். புதிய தொழில்நுட்பத்தை பயன் படுத்துவதில் பிராந்தியங்களுக்கிடையே ஏற்ற தாழ்வுகள் ஏற்படக்கூடாது. தென்னிலங்கைப் பல்கலைக்கழகம் பெறும் அதே தொழில்நுட்பங்கள் வடகிழக்கிலும் துரிதகதியில் தொழிற்படல் வேண்டும்.

## பாடநெறிகளின் அமைப்பு மாற்றங்கள்.

உயர்கல்விப் பாடஏற்பாடு, கற்பித்தல் முறை என்பவற்றைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழக அமைப்பில் முக்கியத்துவம் பெற்று வரும் செல்நெறியானது பல்வேறுபாட நெறிகளும் இதவடிவ அமைப்புடன் சிறுசிறு துண்டங்களாக்கப்பட்டு (modularization of disciplines) கற்ப்பிக்கப்படவுள்ளன. இவ் வழிமுறையினூடாகப் பாடநெறிகள் ஒவ்வொன்றும் இலகுவில் கையாளக்கூடிய சிறுசிறு அலகுகளாக பிரிக்கப்படுகின்றன. இத்தகைய அலகுகள் ஐம்பது பக்கங்கள் வரை கொண்ட பாடநூல் வடிவில் சில வார இடைவெளியில் கற்கக்கூடியதாக இருக்கும். வரையறுக்கப்பட்ட பாடத் தெரிவுகளைக் கொண்ட மூன்றாண்டு அல்லது நான்காண்டு பட்டப்பயிற்சி நெறிகளுக்குப் பதிலாக ஏராளமான அலகுகளிலிருந்து மாணவர்கள் பாடங்களைத் தெரிவு செய்யலாம். இப்பயிற்சிகளைக் கற்றுமுடிப்பதற்கு உரிய புள்ளிகளைப் (points or credits) பெறுதல் வேண்டும். மாணவர்கள் கட்டங்கட்டமாக இப்புள்ளிகளைச் சேகரித்துக் கொள்ளலாம், ஒரு பாடநெறியிலிருந்து அல்லது நிறுவனத்திலிருந்து இப்புள்ளிகளை மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளலாம். பாடஅலகுகளின் (module) மற்றொரு நன்மை அதனை வேறு பாட அலகுகளுடன் இணைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பாட அலகும் அதற்கு முற்பட்ட பாடஅலகு பற்றியும் தொடர்ந்து வரும் பாட அலகு எது என்பதையும் சுட்டிக்காட்டுவதால் இந்த இணைப்பு ஏற்படுகின்றது. இதனால் உயர்கல்வி நிலையங்களின் நேரத்தில் முப்பது சதவீதம் சிக்கனப் படுத்தப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மாணவரின் அறிவுமட்டங்களுக்கேற்ப ஒரு பாடத் தலைப்பைப் பல பாட அலகுகளைக் கொண்டும் கற்பிக்கலாம். இதனால் கற்கைநெறிகளுக்கிடையே பன்னெறிப் பாங்கு (interdisciplinarity) வளர்ச்சியடைய முடியும். தொழிற்பயிற்சியை வழங்கக்கூடிய பாடஅலகுக்கிடையேயும் இத்தகைய பன்னெறித் தொடர்புகள் உருவாக முடியும். இவ்வாறு பாட நெறிகள் சிறுசிறு துண்டங்களாக்கப்படுவதன் முக்கிய விளைவு ஒவ்வொரு தனிப்பட்ட மாணவனும் தனது விருப்பங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப தனது கல்விக் காலத்தை நிர்ணயம் செய்துகொள்ள முடியும். இவ் வழிமுறையில் அறிவுத் தொகுதியானது ஒவ்வொருவரது தனிப்பட்ட விருப்புகளுக்கு ஏற்ப தெரிவு செய்து கற்றுக்

கொள்ளும் வகையில் நூலாக்கம் * (hypertext) செய்யப்படுகின்றது. பாடநெறிகளில் வழமையாகக் காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மைக்குப் பதிலாக நெகிழ்ச்சியான பாட அலகுகள் பயன்படுத்தப் படுகின்றன. இவ்வாறு அறிவானது சில பாடநெறிகளுக்குள் கட்டுண்டு கிடக்காது விடுதலை பெறும் போது மாணவர்கள் புதிய புதிய பாடச் சேர்க்கைகளை உருவாக்கிக் கொள்ள முடியும். வழமையான உயர்கல்வி மரபின்படி சமூகவியலாளர்கள் கணித பாட அலகுகளைப் பயன்படுத்த முடியாது. அவ்வாறே கணித பாட அலகுகள் (உதாரணமாக: probabilities of calculus) தேவைப்படும் பல்வேறு பாடநெறிகளில் அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை.

கணிப்பொறியானது பாடஅலகுகளை வரைந்து ஒழுங்கமைத்துத் தேவையான இணைப்புக்களைச் செய்ய நன்கு பயன்படுகின்றது. மேலும் கணிப்பொறி ஒரு தரவு வங்கியிலிருந்து தேவைப்படும் பாடஅலகுகளை வழங்குகின்றது. மேலும் எந்தப் பாடஅலகுகள் மிகவும் நவீனமான தொழில்நுட்பப் பாங்குடைய இதவடிவ அலகு (state –of –the-art module) என்னும் விடயத்தில் போட்டி ஏற்படுவதால் பாடநூல்களின் தராதரம் அதிகரிக்கின்றது. அறிவுத் தொகுதியானது துரிதகதியில் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டு செல்லும் போது நூலாசிரியர்கள் அதிக சிரமமின்றி தாம் தயாரித்த பாட அலகுகளைத் துரிதமாகப் புதுப்பித்து விடுவர். புதியபாட நூல்களை எழுதுவதைவிட பாடஅலகுகளைப் புதுப்பித்துக் கொள்வது இலகுவானது. அத்துடன் கணிப்பொறியானது பல்லூடக நுட்பங்களைப் பயன்படுத்தி பாடஅலகுகளைத் தயாரிக்க உதவும். எழுத்து மூலமான பாடஅலகுடன் பல்லூடகத்தின் வாயிலாக யதார்த்தமான காட்சிகளும் கணிப்பொறி வரைசித்திரங்களும் (Graphics) கற்பித்தலுக்குப் பயன்படுத்தப்படும். உலகளாவிய தகவல் வலையமைப்பானது (net work) உலகெங்கும் உள்ள பிற உயர்கல்வி நிலையங்களில் பயன்படுத்தப்படும் பாட அலகுகளைப் படிக்கும் வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. இவ்வாறு உருவாகும்

சர்வதேச தொடர்பானது ஒவ்வோரு பாடத்துறையிலும் சர்வதேச தராதரங்களையும், தரநிர்ணயங்களையும் எற்படுத்திக் கொள்ளமுடியும். இப்புதிய பாடஅலகுகள்

***Several text on one Computer system.***

முறையில் ஆசிரியர்கள் ஒதுக்கித் தள்ளப்படமாட்டார்கள். இதற்கு மாறாக அவர்கள் உயர்ந்த அறிவு சார் பணிகளில் ஈடுபட்டிருப்பர். இன்று பிரித்தானியப் பல்கலைக் கழகங்களில் எழுபது வீதத்திற்கு அதிகமானவை இங்கு ஆராயப்படும் இதவடிவ பாடஅலகு பயிற்சி நெறிகளை (modular courses) அறிமுகம் செய்துள்ளன. சுவீடனிலும் வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் இது போன்ற புள்ளி முறைகள் (point schemes) அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உயர்கல்விப் பாடநெறிகள் எப்போதுமே தெரிவுப்பாட அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். இப்புதிய பாட அலகு பயிற்சி நெறி நன்கு வளர்ச்சியுற்ற பின்னர் வழமையான மூன்று பல்கலைக்கழகத் தவணைக்குப் பதிலாக ஆண்டுக்கு இருதவணை முறை (Two semesters) பின்பற்றப்படுகின்றது.

**புதிய திறன்கள்.**

இன்றைய பொருளாதார முறையின் மனிதவலுத் தேவைகளில் ஏற்பட்டுள்ள தீவிர மாற்றங்களின் கராணமாகப் பல்கலைக்கழகங்களும் ஏனைய உயர்கல்வி நிலையங்களும் மாணவர்களின் கல்விச்சித்தியை மட்டுமன்றி வேறு பல திறன்களையும் வளர்க்க வேண்டியுள்ளன. உயர்கல்வியின் இப் புதிய பணியானது உயர்கல்விக்கு புதிய இலக்குகளை வழங்கியுள்ளன. உயர்கல்விநிலையங்கள் மாணவர்களில் வளர்க்க வேண்டிய புதிய திறன்களாவன:

- வாய் மொழியிலும் எழுத்திலும் சிறந்த தொடர்பாடலைச் செய்யக்கூடிய திறன்கள் (Strong oral and written communication skills).
- கணிதம், விஞ்ஞானம் என்பவற்றின் அடிப்படைகள் பற்றிய புரிந்துணர்வும் விளக்கமும்.
- சிறந்த தகவல் தொழில்நுட்பத் திறன்கள்.
- திறனாய்வுச் சிந்தனா ஆற்றல் (critical thinking ability).
- தொடர்கல்வியின் தேவையை நன்கு தெரிந்திருத்தல்.

- குழுவாகச் (team) செயற்படுதலில் மகிழ்ச்சி காணல்
- ஆக்கபூர்வமான சிந்தனையுடன் சுயமுயற்சியுடையோராயுமிருத்தல்.
- சுயகட்டுப்பாடு உடையவராகவும் கடுமையாக உழைக்க முன்வருபவராகவும் இருத்தல்.
- ஆரோக்கியமான போட்டியை விரும்பும் உளப்பாங்குடையோராயிருத்தல்.
- சிறந்த பெறுபேறுகளை இலக்காகக் கொண்டு பணிபுரிதல், தீர்மானம் மேற்கொள்ளத் தயங்காத பண்பு.
- இறுதியாக பல்கலைக்கழக மாணவர்கள் *கலாசார விழிப்புடையோராகவும் சர்வதேச விழிப்புடையோராகவும் இருத்தல்.*

மேலே கோடிடப்பட்ட "கலாச்சார, சர்வதேச விழிப்புணர்வை மேம்படுத்த வேண்டும்" என்ற உயர்கல்வியின் புதிய செல்நெறி பற்றித் தனியாக விளக்க வேண்டிய அளவுக்கு அதில் ஒரு புதிய சிந்தனையும் முக்கியத்துவமும் உண்டு. உயர்கல்வியைத் திட்டமிடும் பணியில் ஈடுபடுவோருக்குப் பயன்படக்கூடிய ஒரு சிந்தனை இதுவாகும் என்பது எமது கருத்து. "கலாசாரம், நாகரிகம் என்பவற்றுக்கு இடையே அடிப்படையான வேறுபாடு உண்டு. கலாசாரமானது குறிப்பிட்ட இனக்குழுக்களுக்குரியது, பிற இனக்குழுவினருக்கு முற்றாக மாற்றம் செய்யப்பட முடியாதது. (non transferable) விஞ்ஞான உண்மைகளுடன் தொடர்பற்ற பல நம்பிக்கைகளைக் கொண்டது. (belief system), மேலும் கலாச்சாரங்கள் அகவயத்தன்மையுடைய விழுமியங்களையும் (subjective values) பாரம்பரியத்தைப் பேணும் நோக்கும் கொண்டவை; பகுத்தறிவுக்குப் பதிலாக உணர்வுகளுக்கும் நுண்ணறிசுகளுக்கும் (affective and intution) முதலிடம் தருபவை...

ஆனால் நாகரிகம் என்பது அறிவுப் பெருக்கத்தின் விளைவாக உருவானது; விஞ்ஞானரீதியான உண்மை, பகுத்தறிவு எனபவற்றின் அடிப்படையிலானது; விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவைப் பிரதிபலிப்பது; நாகரிகத்தின் அம்சங்களும் செல்நெறிகளும் கலாசாரம் போலன்றி உலகெங்கும் பரவக்கூடியவை, எனவே அனைத்துலக அம்சம் (Universality)

இருக்கின்றது. எனவே உலகளாவிய ரீதியில் பல கலாசாரங்கள் காணப்படலாம். ஆனால் உலகளாவிய ரீதியில் காணப்படுவது ஒரே ஒரு நாகரிகமேயன்றி வேறில்லை. ஒரே ஒரு நாகரிகம் என்பது அனைத்துலக நாடுகளுக்குப் பொதுவான செல்நெறிகள் (global trends) என்றும் பொருள்படும். உலகெங்கும் இயங்கும் வங்கிகளும் மருத்துவநிலையங்களும் வாகனத் தொழிற்சாலைகளும் தமது நாடுகளின் கலாசார செல்வாக்கினால் பாதிக்கப்படாது ஒரே வழிமுறைகளைப் பின்பற்றி இயங்குவதால் அவை நவீன நாகரிகத்தின் அம்சங்களுக்கு உதாரணங்களாகின்றன. ஆனால் கலாசாரங்கள் நாட்டுக்கு நாடும் நாடுகளுக்குள்ளும் வேறுபடுகின்றன; எண்ணிக்கையிலும் கலாசாரங்கள் பலப்பல கலாசராங்களுகிடையே முரண்பாடுகள் ஏற்படலாம். ஆனால் நாகரிகத்தில் முரண்பாடு என்ற ஒன்றில்லை. ஏனெனில் உலகிலிருப்பது ஒரே ஒரு நாகரிகமே!.

நவீன நாகரிகத்தின் முக்கிய அம்சமான விஞ்ஞானப் படைப்புகளிலும் கற்பனைகள், நம்பிக்கைகள், உள்ளுணர்வு அழகியல போன்ற கலாசார அம்சங்கள் உண்டு. ஆனால் விஞ்ஞான ஆய்வு முடிவுகிடைக்கப் பெற்ற பின்னர், அது உலகெங்கும் பரவுகின்றது; பரிசோதனை முறை மூலம் அவ்வாய்வு முடிவு மீளாக்கம் செய்யப்படலாம். என்பதால் அம்முடிவும் கண்டுபிடிப்பும் சர்வதேச அங்கிகாரம் பெறுகின்றன. ஆனால் கலாசாரப்படைப்புகள் அவ்வாறன்றி படைப்பாளியின் முத்திரை, அவரது உணர்வுபூர்வமான பார்வை என்பவற்றுடன் விளங்கும். கலாசாரம், நாகரிகம் என்பன மற்றொரு வகையிலும் வேறுபடும். ஒரு நாட்டின் நாகரிக நிலமை எவ்வளவு உயர்வானதாக காணப்பட்டாலும், அங்கு விஞ்ஞான, தொழில்நுட்பவளர்ச்சி எவ்வளவு உயர்வானதாக காணப்பட்டாலும், அந்நாட்டிற்கே உரிய கலாசார ஆளுமை சிதைவுறாது கட்டிக் காக்கப்படலாம். ஜப்பான் நாடு இதற்கு ஒரு முக்கிய உதாரணமாகும். இன்று ஏற்பட்டுவரும் ஐரோப்பிய ஒருமைப்பாடானது கலாசாரத்தின் விளைவாகமாட்டாது. பகுத்தறிவுச் சிந்தனை காரணாகாரிய அடிப்படை என்பவற்றின் அதாவது நாகரிகத்தின் படைப்பாகவும் விளைவாகவுமே அதனைக் கொள்ளுதல் வேண்டும். உலகளாவிய ரீதியில் இன்று காணப்படும் பிரிவினைவாதம் (fragmentation) ஒருமைப்பாடு (integration) ஆகிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட செல்நெறிகளாவன

முறையே கலாசாரத் தனித்துவம், நாகரிகத்தின் நிர்ப்பந்தம் என்பவற்றின் விளைவாக எழுந்தவையே!

உயர்கல்வியின் மரபுவழி நோக்கம் அறிவை உருவாக்கி தொகுத்து சமூகத்தில் விரிவாகப் பரப்புவதாகும், அத்துடன் உயர்கல்வியானது சிறந்த விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கவும் உதவவேண்டும். உயர்கல்வி அமைப்பின் இன்றைய பணி இவ்விரு பிரதான கல்வியின் நோக்கங்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்தி அவற்றை நிறைவு செய்வதாகும். புதிய நூற்றாண்டில் போரையும் அதன் தீய விளைவுகளையும் முற்றாக அகற்றிவிட வேண்டுமாயின் உயர்கல்வி அமைப்பானது உலகளாவிய நாகரிகம், கலாசாரத் தனித்துவம் என்பவற்றுக்கு சமமான முக்கியத்துவத்தை வழங்கி இளைஞர்கள் இரண்டிலும் சீரான பயிற்சியைப் பெற உதவவேண்டும்; 21ஆம் நூற்றாண்டின் நாகரிகம் பல்வேறு கலாசாரங்களின் இருப்பை ஏற்றுக் கொள்வதாகவும் பலவேறு கலாசாரங்களும் உலகளாவிய ரீதியிலான நாகரிகத்தை ஏற்றுப் பயன் பெற வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. சுருங்கக் கூறின் உயர்கல்விச் செயற்பாடானது கலாசாரத்துக்கும் நாகரிகத்துக்கும் இடையே ஏற்படக்கூடிய பதற்ற நிலையைத் தணிக்க உதவவேண்டும். அவை இரண்டுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய பணியைச் செய்யவேண்டும் என்பது உயர்கல்வி முறைமையின் முக்கிய ஒரு செல்நெறியாகும்.

இன்று உயர்கல்வியில் செல்வாக்கு செலுத்தி வரும் பிற சிந்தனைச் செல்நெறிகள் சிலவற்றை சுருக்கமாக நோக்குவோம்:

- திறமைச்சித்தியின் அடிப்படையில் இனம், மொழி, பால்வகுப்பு, சமயம், வயது, சமூக, பொருளாதார வேறுபாடுகள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது யாவருக்கும் உயர்கல்வி வாய்ப்புகள் உறுதி செய்யப்படல் வேண்டும். இவ்விடயத்தில் எதுவித பாரபட்சமான அனுமதிக் கொள்கைகளையும் ஏற்றுக் கொள்வதற்கில்லை.
- உயர்கல்விமுறையில் காணப்படும் சகல பால்வகுப்புப் பாகுபாடுகளையும் (gender strereotyping) அகற்றும் முறையில் உயர்கல்விக்

கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். உயர்கல்வியின் சகல பாடத்துறைகளிலும் பெண்கள் சேர்ந்து பயில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உயர்கல்வித் துறையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டில் பெண்களும் பங்கு கொள்ள இடமளிக்கப்படல் வேண்டும்.

- உயர்கல்வியும் ஆராய்ச்சியும் உள்ளூர், பிராந்திய, தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதை உறுதிசெய்ய உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சமூகத்தின் பிற துறைகளுக்குமிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் திட்டங்கள் வரையப்படல்வேண்டும்.

- உயர்கல்வி நிலையில் மாணவர்களே முக்கிய கவனத்திற்குரியவர்கள் என்னும் கொள்கை இன்று உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படுகின்றது. அவர்களுடைய பாட ஏற்பாட்டைப்புதுப்பித்தல் உயர்கல்வி பற்றிய கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பணி என்பவற்றில் மாணவர்களும் ஈடுபடுத்தப்படல் வேண்டும். அதற்காகப் புதிய நிறுவன அமைப்புகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.மேலும் மாணவர்கள் சுதந்திரமாக தம்மைதாமே நிறுவனமயப்படுத்துக் கொள்ளும் (ORGANIZE) உரிமை அவர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பதும் ஒரு முக்கிய செல்நெறியாகும்.

- உயர்கல்வி வளர்ச்சியையும் தராதர மேம்பாட்டையும் பொறுத்தவரையில் உயர்கல்வி ஆசிரியர்களும் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பல நிறுவனங்களுக்குச் சென்று கல்விசார் அனுபவங்களைப் பெற்றவர்களாக (international mobility) இருத்தல் வேண்டும் என்னும் விடயம் இன்று வலியுறுத்தப்படுகின்றது.

- உயர்கல்வித் தராதரங்கள் குறைந்துவிட்டன. மாணவர்கள் பரீட்சை நோக்குடன் பாடவிடயத்தைக் கற்பதுடன் நின்றுவிடுகின்றார்கள். என்ற முறைப்பாட்டின்

காரணமாக நவீன உயர்கல்வி நிறுவனங்கள் கல்வியை வழங்கும் போது பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது புதிய ஒரு செல்நெறியாகும். நன்கு தகவல்களை அறிந்த, அறிவுபெற்ற, நன்கு ஊக்குவிக்கப்பட்ட பிரஜைகளாகவும் சமூகத்தின் பிரச்சினைகளை நுணுகி ஆராயும் திறன் கொண்டோரையும் சமூகத்தின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பற்றிச் சிந்தித்து அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடியவர்களையும், சமூகப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களையும் உருவாக்குவது உயர்கல்வியின் புதிய நோக்கங்களுள் ஒன்றாகும்.

- இந் நோக்கங்களுடன் உயர்கல்விப் பாட ஏற்பாடு திருத்தப்பட்டு வருகின்றது. புதிய கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. பாடநெறிகளைக் கற்றுத் தேறும் வழமையான நோக்குக்கு அப்பால் புதிய இலக்குகளை அடையும் நோக்குடன் இம்மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. தொடர்பாடல் திறன்கள், தகைமைகள் ஆற்றல்கள் என்பவற் றையும் ஆக்கபூர்வமான திறனாய்வு திறன்களையும் சுதந்திரமாக சிந்திக்கவும் பன்மைச் சமுதாய நிலைகளில் பலருடன் அணிசேர்ந்து பணிபுரியவும் தேவையான திறன்களை புதிய பாட ஏற்பாட்டு மாற்றங்கள் பிரதிபலிக்கின்றன. குறிப்பாக உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் கற்பிக்கப்படல் வேண்டும் என்ற புதிய கோரிக்கையின் காரணமாக சகல பாட நெறிகளும் இவ்வம்சம் உட்பொதிந்திருப்பதைக் காணலாம்.
- உயர்கல்வி நிறுவனங்கள் வழமையாக வழங்குகின்ற பயிற்சி நெறிகள் ஒரு குறுகிய வரையறைக்குள் அடங்குகின்றன. இதனால் உயர்கல்வியில் அதிகளவில் சேர்ந்து பயிலும் பல்வகைப்பட்ட ஆற்றல்களையும், அனுபவங்களையும் சமூகப்பின்னணிகளையும் கொண்ட மாணவர்களுக்கு பாடத் தெரிவுகள் குறைவாகவுள்ளன என்ற முறைப்பாடு உண்டு.

எனவே உயர்கல்வி நிறுவனங்கள் தமது பயிற்சி நெறிகளை மேலும் பரந்துபட்டதாக பல்வகைப்படுத்தல் வேண்டும் (Diversification). இதன் காரணமாக இன்று புதுப்புது வகையான பல்வகைப்படுத்தப்பட்ட உயர்கல்வி நிறுவனங்கள் பொதுத் துறையாலும் தனியார் துறையினராலும் உருவாக்கப்படுகின்றன. இவை பல்வேறு வகையான மரபுவழிப் பட்டப்பயிற்சிநெறிகள், குறுங்கால பயிற்சிநெறிகள், பகுதிநேரப்படிப்புகள், நெகிழ்ச்சியான கால அட்டவணைகள் சிறு அலகுகளாக்கப்பட்ட பயிற்சி நெறிகள், தொலைக்கல்வி ஏற்பாடுகள் என்பவற்றை அறிமுகம் செய்துவருகின்றன. சுருங்கக் கூறின் இந்நூற்றாண்டின் இறுதியில் உயர்கல்வித்துறையில் நன்கு வலுப்பெற்று வரும் செல்நெறி உயர்கல்வி மிகப்பரந்த அளவில் பல்வகைப்படுத்தப்படல் வேண்டும்.

உலக நாடுகளின் உயர்கல்வி வரலாற்றை உற்று நோக்குமிடத்து காலங்காலமாக உயர்கல்வியானது புதிய நிலைமைகளுக் கேற்பத் தன்னை மாற்றிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது என்பதையும், சமூக முன்னேற்றத்தையும், சமூக மாற்றத்தையும் ஏற்படுத்துவதில் உயர்கல்வி நிறுவனங்கள் முன்நின்று உழைத்தன என்பதை அறிய முடியும். அண்மைக் கால மாற்றங்களின் காரணமாக நவீன சமூகம் அறிவுசார் சமூகமென்றும், புதிய நூற்றாண்டு, தகவல் மைய நூற்றாண்டு என்றும் வர்ணிக்கப்படுகின்றன. இந்நிலையில் உயர்தர அறிவைத் தேடிப் பெற்று சமூகத்தில் அதனைப் பரப்புகின்ற பணியைச் செய்யும் உயர்கல்வி நிலையங்கள், சமூகங்களினதும், நாடுகளினதும் சமூக பொருளாதார, கலாசார மேம்பாட்டுக்கான மைய நிலையங்களாக வளர்ச்சியைப் பெறவேண்டும்.

உலகளாவிய ரீதியில் இலகுவில் தென்படும் உயர்கல்வித் துறைசார்ந்த புதிய சிந்தனைகள், செல்நெறிகள் சிலவற்றை இதுவரை எடுத்துக்கூறினோம். இவை அனைத்தும் எமது நாட்டின் உயர்கல்வி வளர்ச்சிக்குப் பொருந்துவன என்றோ, இவை அனைத்தையும் எமது நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்றோ கூறுவதற்கில்லை. ஆயினும் உலகமயமாக்கம் மிகுந்து செல்லும் இவ்வேளையில் இச்செல்நெறிகள் எமது நாட்டிலும் இயல்பாகவே வந்து சேரும்

சந்தர்ப்பங்களும் உண்டு. ஆயினும் சிறந்த பொருத்தமான உயர்கல்விச் சிந்தனைகளும் செல்நெறிகளும் இயல்பாக வந்திணையும் வரை காத்திராது, அச் செல்நெறிகள் பற்றிய எமது முன்னறிவை இலங்கையின் எதிர்கால உயர்கல்வி வளர்ச்சி பற்றிய செயற்றிட்டங்களில் இணைத்துக்கொள்வதில் தவறில்லை. செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையேஉயர் கல்விவளர்ச்சியில் பல ஏற்றத் தாழ்வுகள் இருப்பதை உயர்கல்வி ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். உயர்கல்வியில் இன்று சிறந்த தராதரங்களை கொண்டு விளங்கும் நாடுகளை எட்டிப் பிடிக்கும் எமது முயற்சிகளுக்கு இச்சர்வதேச செல்நெறிகள் பற்றிய அறிவும், விளக்கமும் பயன்படும் என்பது எமது தாழ்மையான கருத்து.



# பின்னிணைப்பு - I

## இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி - சில அடிப்படைத்தரவுகள்

1. பல்கலைக்கழகங்களின் தொகை
கொழும்பு, கிழக்கு, யாழ்ப்பாணம், பேராதனை, களனி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, ருகுண, ரஜரட்டை, சப்பிரகமுவா, தென்கிழக்கு, மொறட்டுவ, திறந்த பல்கலைக்கழகம்.
-12

2. பட்ட மேற்படிப்பு நிலையங்கள்.
விவசாயம், தொல்பொருளியல், முகாமைத்துவம், மருத்துவம், பாளியும் பௌத்த கற்கை நெறிகளும், விஞ்ஞானம்.
-06

3. பிற உயர்கல்வி நிறுவனங்கள்.
அழகியல்கல்வி, கணிப்பொறித் தொழில்நுட்பம், உள்நாட்டுமருத்துவம், தொழிலாளர்கல்வி, ஆயள்வேதம் - கம்பஹா
-05

4. போதனாபீடங்கள்.
மருத்துவம், பல்மருத்துவம், கல்வியியல், கலை, விஞ்ஞானம், விவசாயம், முகாமைத்துவம், பொறியியல் முதலியன.
-45

5. துறைகள்
போதனாபீடங்களின் கீழ் வருவன.
-280

6. I பல்கலைக்கழகச் கல்விச் செலவு

| | |
|---|---|
| 1990 | - 106 கோடி ரூபா |
| 1993 | - 213 கோடி ரூபா |
| 1995 | - 283 கோடி ரூபா |
| 1996 | - 334 கோடி ரூபா |

II பல்கலைக்கழகச் கல்விச் செலவு மொத்த தேசிய உற்பத்தியில் %

| | |
|---|---|
| 1994 | 48% |
| 1995 | 48% |
| 1996 | 49% |

III பல்கலைக்கழகச் கல்விச் செலவு - கல்விச் செலவில்

| | |
|---|---|
| 1994 | 14.68% |
| 1995 | 13.90% |
| 1996 | 14.36% |

7. பாடவகைப்படி மாணவர் அனுமதி 1995/96

| பாடத்துறை | மாணவர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| 🕮 கலை | 2940 | 32.0 |
| 🕮 முகாமைத்துவம் | 858 | 9.3 |
| 🕮 வர்த்தகம் | 958 | 10.4 |
| 🕮 சட்டம் | 207 | 2.2 |
| 🕮 விஞ்ஞானம் | 1916 | 20.8 |
| 🕮 மருத்துவம் | 889 | 9.7 |
| 🕮 பல் மருத்துவம் | 82 | 0.9 |
| 🕮 விவசாயம் | 415 | 4.5 |
| 🕮 பொறியியல் | 752 | 8.2 |
| 🕮 வில. மருத்தகும் | 76 | 0.8 |
| 🕮 கட்டடக்கலை | 50 | 0.5 |
| 🕮 Quantity Serveying | 47 | 0.5 |
| மொத்தம் | 9190 | 100.0 |

8. மாவட்டரீதியான மாணவர் அனுமதி 1995/96

| மாவட்டங்கள் | மாணவர் தொகை |
|---|---|
| ☞ கொழும்பு | 1515 |
| ☞ கம்பஹா | 643 |
| ☞ களுத்துறை | 446 |
| ☞ மாத்தளை | 150 |
| ☞ கண்டி | 642 |

| | |
|---|---|
| ☞ நுவரெலியா | 175 |
| ☞ காலி | 542 |
| ☞ மாத்தறை | 542 |
| ☞ யாழ்ப்பாணம் | 993 |
| ☞ கிளிநொச்சி | 47 |
| ☞ வவுனியா | 43 |
| ☞ திருகோணமலை | 111 |
| ☞ மட்டக்களப்பு | 175 |
| ☞ அம்பாறை | 211 |
| ☞ புத்தளம் | 214 |
| ☞ குருநாகல் | 787 |
| ☞ அநுராதபுரம் | 274 |
| ☞ பொலனறுவை | 112 |
| ☞ பதுளை | 308 |
| ☞ மொனராகலை | 124 |
| ☞ கேகாலை | 385 |
| ☞ இரத்தினபுரி | 367 |
| மொத்தம் | 9190 |

9. **I** அனுமதிக் கொள்கை 1995/96

| திறமைச் சித்தி | மாவட்ட அனுமதி | கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களுக்கு |
|---|---|---|
| **40%** | **55%** | **05%** |

**II** கல்வியில் பின் தங்கிய மாவட்டங்கள்

அம்பாறை, அநுராதபுரம், பதுளை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மொனராகல, முல்லைத்தீவு, நுவரெலியா. -13

III

## 10. மாவட்டரீதியான மாணவர் அனுமதி 1995/96 (திறமைச் சித்தி அடிப்படையில்)

- கொழும்பு -816 (1411)
- கம்பஹா -252 (599)
- களுத்துறை -207 (403)
- மாத்தளை -41 (142)
- கண்டி -330 (679)
- நுவரெலியா -15 (181)
- காலி -265 (430)
- மாத்தறை -306 (435)
- அம்பாந்தோட்டை -106 (229)
- யாழ்ப்பாணம் -641 (921)
- கிளிநொச்சி -11 (35)
- மன்னார் -16 (57)
- முல்லைத்தீவு -20 (53)
- வவுனியா -16 (49)
- திருகோணமலை -32 (123)
- மட்டக்களப்பு -92 (194)
- அம்பாறை -68 (194)
- புத்தளம் -69 (187)
- குருநாகல் -453 (721)
- அநுராதபுரம் -61 (259)
- பொலநறுவை -25 (100)
- பதுளை -67 (268)
- மொனராகல -20 (123)
- கேகாலை -209 (362)
- இரத்தினபுரி -102 (309)

❖ அடைப்புக்குறிக்குள் மாவட்டரீதியாக அனுமதி பெற்ற மொத்த மாணவர் தொகை

## 11. பல்கலைக்கழக வகைப்படி மாணவர் அனுமதி - 1995/96

- கொழும்பு - 1504
- பேராதனை - 1859
- ஸ்ரீஜயவர்த்தனபுர - 1489
- களனி - 1246
- மொறட்டுவ - 482
- யாழ்ப்பாணம் - 860
- ருகுணை - 667
- கிழக்கு - 244
- தென்கிழக்கு - 121

IV

## 12. இனவகைப்படி மாணவர் அனுமதி 1993-1996

| | 1993/94 | 1994/95 | 1995/96 |
|---|---|---|---|
| சிங்களவர் | 5841 | 5941 | 6250 |
| தமிழர் | 971 | 884 | 1367 |
| முஸ்லீம்கள் | 496 | 492 | 423 |

❖ அட்டவணை 1–12 வரைக்கான ஆதாரம்: ப.மா.ஆணைக்குழுவின் புள்ளிவிபரக் கையேடுகள் 1993 – 1996

13. உயர்கல்வி மாணவர் தொகை 1995/96

1. பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர் (உள்வாரி) - 36797
2. பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர் (வெளிவாரி) - 90862
3. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் - 4844
4. திறந்த பல்கலைக் கழகம் மற்றும் நிறுவனங்களில் (அழகியற் கல்வி., தொழிலாளர் கல்வி, உள்நாட்டு, மருத்துவம், போன்றன.) பயிலும் மாணவர்கள்
   - -திறந்த பல்கலைக் கழகம் - 16734
   - -ஏனைய நிறுவனங்கள் - 5218
5. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றோர் தொகை (1996) - 6233
6. பல்கலைக்கழகப் வெளிவாரிப் பட்டம் பெற்றோர் (1996) - 2110
7. உயர்பட்டம்/திப்ளோமா பெற்றோர் (1996) - 1853
8. திறந்த பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனங்களில் பட்டம் பெற்றோர் - 2682
9. பல்கலைக்கழக -அனுமதித் தகுதி பெற்றோர் - 71846
   -அனுமதி பெற்றோர் - 11462

ஆதாரம்: ப.மா.ஆணைக்குழு, பல்கலைக் கழகங்கள் பற்றிய வருடாந்த கைந்நூல் 1998.

14. க.பொ.த உ/த பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள்.

| | 1990 | | 1991 | | 1993 | | 1996 | | 1997 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| 1.பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் | 105983 | | 107403 | | 98508 | | 126443 | | 127131 | |
| 2..அமர்ந்தவர்கள் | 92536 | | 94218 | | 90116 | | | | | |
| 3.பல்கலை. அனுமதித் தகுதி பெற்றோர். | 32984 | 35.59 | 38682 | 41.06 | 47031 | 52.19 | 58942 | 53.8 | 60267 | 54.24 |
| 4.4பாடச் சித்தி பெற்றோர் | 33366 | 36.01 | 38366 | 40.72 | 44327 | 49.19 | 57671 | 52.6 | 61650 | 55.5 |
| 5.எல்லாப் பாடங்களிலும் சித்தியில்லை | 13333 | 14.39 | 4443 | 4.72 | 7154 | 7.94 | 4443 | 4.0 | 5929 | 5.3 |

ஆதாரம்: பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள், ஜனாதிபதிச் செயலணி -1997

15. பயிற்று மொழி வகைப்படி பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள் -1997

| | 1 AB | 1 C | வகை2 | வகை3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **A.**பாடசாலைகள் பயிற்று மொழி | | | | | |
| சிங்களமொழி | 405 | 1499 | 2984 | 2347 | 7235 |
| தமிழ்மொழி | 156 | 344 | 711 | 1607 | 2818 |
| இருமொழி | 26 | 17 | 18 | 6 | 67 |
| **B.**மாணவர் தொகை | | | | | |
| சிங்களமொழிவழி | 828,000 | 1,097,000 | 915,000 | 314,000 | 3,155,000 |
| தமிழ்மொழிவழி | 212,000 | 262,000 | 268,000 | 233,700 | 968,000 |
| **C.**ஆசிரியர் தொகை | | | | | |
| சிங்களமொழிவழி | | | | | 146,000 |
| தமிழ்மொழிவழி | | | | | 32,300 |

**D.** தமிழ்மொழி ஆசிரியர் தொகை (கல்வித்தகுதி வகைப்படி) -1997

| கல்வித்தகுதி | தொகை |
|---|---|
| 1. பட்டதாரிகள் | 6178 |
| 2. பயிற்றப்பட்டவர்கள் | 16167 |
| 3. சான்றிதழ் பெற்றவர்கள் | 506 |
| 4. சான்றிதழ் அற்றவர்கள் | 4464 |
| 5. பிறர் | 5984 |
| மொத்தம் | 33,299 |

ஆதாரம்: பாடசாலை மதிப்பீடு 1997.

E. தமிழ்மொழி வழிப் பாடசாலைகள், மாணவர்கள் (மாகாணவகைப்படி) 1997.

| மாகாணம் | தமிழ்மொழி வழிப் பாடசாலைகள் தொகை | தமிழ்மொழிவழி பயிலும் மாணவர் தொகை |
|---|---|---|
| 1.மேல் | 122 | 78,640 |
| 2.மத்திய | 522 | 170,694 |
| 3.தென் | 39 | 12,750 |
| 4.வட | 831 | 262,621 |
| 5.கிழக்கு | 686 | 65,692 |
| 6.வடமேற்கு | 152 | 60,927 |
| 7.வடமத்திய | 83 | 24,025 |
| 8.ஊவா | 190 | 48,700 |
| 9.சப்பிரகமுவா | 193 | 44,152 |
| மொத்தம் | 2818 | 968,201 |

ஆதாரம்: பாடசாலை மதிப்பீடு 1997.

F. பாடசாலை வகைப்படி பாடசாலைகள் , 1997

| | 1 AB | 1 C | வகை 2 | வகை3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1.சிங்களப் பாடசாலைகள் | 420 | 1507 | 2992 | 2350 | 7269 |
| 2.தமிழ்ப் பாடசாலைகள் | 108 | 197 | 475 | 1333 | 2113 |
| 3.முஸ்லிம் பாடசாலைகள் | 59 | 156 | 246 | 277 | 738 |
| மொத்தம் | 587 | 1,860 | 3,713 | 3,960 | 10,120 |

ஆதாரம்: பாடசாலை மதிப்பீடு 1997

C. பாடசாலை வகைப்படி தமிழ்ப் பாடசாலைகள் மாகாணரீதியாக, 1997

| | 1AB | 1 C | வகை2 | வகை3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1.மேல் | 05 | 06 | 27 | 38 | 76 |
| 2.மத்திய | 08 | 23 | 78 | 323 | 432 |
| 3.தென் | - | 01 | 04 | 05 | 10 |
| 4.வட | 65 | 89 | 218 | 442 | 814 |
| 5.கிழக்கு | 26 | 58 | 83 | 250 | 417 |
| 6.வடமேற்கு | 01 | 05 | 11 | 13 | 30 |
| 7.வடமத்திய | - | 02 | 05 | 01 | 08 |
| 8.ஊவா | 02 | 07 | 29 | 130 | 168 |
| 9.சப்பிரகமுவா | 01 | 06 | 20 | 131 | 158 |
| மொத்தம் | 108 | 197 | 475 | 1,333 | 2,113 |

1. 1AB – க.பொ.த உ.த விஞ்ஞானப்பிரிவுடன்.
2. 1C – க.பொ.த உ.த கலை, வர்த்தகப் பிரிவுடன்
3. வகை2 – க.பொ.த சா.த வரை மட்டும்
4. வகை3 – 6 – 8ஆம் தரங்கள் வரை

ஆதாரம்: பாடசாலை மதிப்பீடு 1997.

# BIBLIOGRAPHY


1. **Arudpragasam, K.D.** Admission Policies in Higher Education for Sri Lanka, **Colombo, 1992.**

2. **Berendt, Brigitte, "How to support and to Bring About the shift from Teaching to learning through Academic Staff, development Programmes,** Higher Education in Europe, **Vol. XXIII, No 3, 1998.**

3. **Davies, John, L, The shift from Learning to Teaching, Policies for the Universities of the 21st Century,** Higher Education in Europe, **Vol. XXIII, No 3, 1998.**

4. **Delors, J, Learning: the treasure within.** Report to UNESCO of the Int. COM. On Edu. for the 21st Century, **UNESCO Publishing , Paris 1996.**

5. **Hamm, Bernd, Higher Education on the Eve of the Twenty First Century,** Higher Education in Europe, **Vol. XXII, No 1, 1997.**

6. **Hochleitner Ricardo Diez - The future of Universities ,** Higher Education in Europe, **Vol. XXIII, No 1, 1998.**

7. Journal of the Ceylon University Asso. **1906.**

8. **Malasekara, G.P. Beginnings of the University Education in Ceylon,** A Centenary Vol. 1968

9. **Kathryn M. Moore, The Challenge of Change in the Information Age: Three Forces Spurring University Transformation,** Higher Education in Europe, **Vol. XXIII, No 2, 1998**

10. **Silva ,de C.R . "Sinhala- Tamil Relations and Education in Sri Lanka: The University Admissions Issue, in R.B. Goldman and A.J.Wilson .ed,** From Independence to Statehood: Managing ethnic conflict in six African and Asian States, **London 1984.**

11. **Silva, De, K.M.D., G.H Peiris (Ed),** The University System of Sri Lanka **ICEC, Kandy, 1995.**

12. **Uebersfeld, J. The Role of Continuing Education in Higher Education in the twenty –First Century** , Higher Education in Europe, **Vol. XXIII, No 3, 1998**

13. **Watson,K. UNESCO's Vision for Education in the Twenty first century,** Int.Jour. of Educational Development **19, 7-16, 1999.**

14. World Bank, **Various years World Development report, Washington, D.C**



பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழக சமூகவிஞ்ஞானக் கல்வித் துறையில் பல்கலைக்கழக ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். பேராதனைப் பல்கலைக்கழக கல்வியியல்மாணி சிறப்புப் பட்டதாரியான இவர் ஜப்பான் அயல்மொழிப் பல்கலைக் கழகம், ஹிரோசிமாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதுமாணிப் பட்டம் பெற்றவராவார். கல்வியியல்துறை சார்ந்த பதினாறுநூல்களையும், இருபத்தியிரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். வெகுசன நாட்டத்தை ஈர்க்கும் வகையில் தேசிய பத்திரிகைகளில் ஏராளமான கட்டுரைகளையும், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் உரையாற்றியும் வருவதன் மூலமாக நல்ல கல்வியியலாளராக தேசிய மட்டத்தில் இனங்காணப்பட்டவர் சோ. சந்திரசேகரம் அவர்கள்.

புதுடெல்லி, திரிப்போலி, ஒஸ்லோ, சென்னை, கொழும்பு போன்ற பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்குகளில் பங்கு பற்றிய அனுபவமும் கொண்டவர்.

திறந்த பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்காவின் ஒபோன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அதிதி விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி உள்ளார்.

தேசிய கல்வி நிறுவகம், ஆசிரிய கல்விக்கான தேசிய அதிகார சபை, தேசிய சுவடியாக்கல் திணைக்களம், தேசிய கல்விச் சபை, கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான சார்க் அமைப்பு போன்றவற்றில் அங்கத்தவராகவும், ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார்.

*